362

ஸர்வதாரி ௵
கார்த்திகை ௴

ஸம்புடம் - 7
ஸஞ்சிகை - 11

ஸ்ரீ:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - AUG 1949
MADRAS



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 NOV 1948
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்குமிடம்:

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

November 1948
Vol. 7 No. 11

# விஷய ஸூசிகை.


| | | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் | ... | ... | 274 |
| 2. | மத்வதிகரணம் | ... | ... | 277 |
| 3. | மதுராலாபம் | ... | ... | 280 |
| 4. | ஜந்மாதி ஸூத்ர லக்ஷண விசாரம் | | ... | 284 |
| 5. | திருக்கண்டியூர் | ... | ... | 286 |
| 6. | உத்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன் | | ... | 290 |
| 7. | நற்போது போக்த | ... | ... | 291 |
| 8. | ஆலய ப்ரவேசம் | ... | ... | 294 |
| 9. | ஜந்மாதி லக்ஷண விவேசநம் | ... | ... | 296 |
| 10. | பஞ்சாங்க ஸங்க்ரஹம் | ... | ... | 300 |
| 11. | ஸ்ரீ ஆசார்யா ப்யுதயம் | ... | ... | 301 |
| 12. | செய்திகள் | ... | ... | 304 |
| 13. | ஸம்பாதகரின் குறிப்புக்கள் | ... | ... | 305 |


## வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டு மென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 AUG 1949
MADRAS



# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

| ஸம்புடம் 7 | ஸர்வதாரி ௵ கார்த்திகை ௴ | ஸஞ்சிகை 11 |
| --- | --- | --- |

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 NOV 1948
MADRAS

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

### ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

விவேகர்:—[கண்களை மலர்த்தி நோக்கி]

'பாராவார பயோவிஶோஷணகலாபாரீணகாலாநல
ஜ்வாலாஜாலவிஹாரஹாரிவிஶிகவ்யாபாரகோரக்ரம: ।
ஸர்வாவஸ்தஸக்ருத்ப்ரபந்நஜநதாஸம்ரக்ஷணைகவ்ரதீ
தர்மோ விக்ரஹவாநதர்மவிரதிம் தந்வீ ஸ தந்வீத ந: ॥'

என்கிறார். இது தஶாவதார ஸ்தோத்ரத்தில் ராம விஷய ச்லோகம். நாடகத்தில் பல காட்சிகளைக் காட்டுவர்; ஸமுத்ரம் தீயால் எரிகிற காட்சி; 'ஸ்ரீ வால்மீகி பகவானாலே த்ருஷ்டமா யிருப்பதொரு ஶரணாகதி வேதம்' என்று ராமாயண ப்ரபந்தத்தை அபயப்ரதாந ஸாரம் வர்ணித்தது. 'இப்படி இப்ரபந்தத்தில் பண்ணுகிற பஹுவிதங்களான வேதோபப்ரஹ்மணங்களில் சொல்லுகிற ஸர்வ ஶரண்ய பரதத்வ விஷயமாயும், ஸர்வாதிகாரமான ஶரணாகதி ரூப பரம ஹித விஷயமாயும் இரண்டு வகையாயிருக்கும்' என்று முக்யமாக ஶரணாகதி தர்மத்தையும் ஶரண்ய தத்வத்தையும் ச்வேதாச்வதர மந்த்ராதிகளி லுள்ளபடி உபப்ருஹ்மணம் செய்து தெளிவிப்பதே இப்ரபந்தம். ப்ரஹ்மாவைப் படைத்து அவருக்கும் வேதங்களை ஓதுவித்தவர் ஶரண்ய தத்வம். அவரை ஶரணமடைவது மோக்ஷ மளிக்கும் என்ற ச்வேதாச்வதர மந்த்ரத்தை ராமாயணம் தெளிவிப்பது. ப்ரஹ்மா இந்த ப்ரபந்தத்தைச் செய்து வால்மீகிக்கு ஞானக் கண்ணளித்து காவ்ய ஸரஸ்வதீ நிர்மாண ஶக்தியையும் கொடுத்து இப்ரபந்தத்தைப் பாடுவித்தார். ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதி தேவர்கள் தாங்கள் கோரிய ராவண வதம் முடிந்ததும் ராமனிடம் வந்து, 'மூன்று லோகங்களுக்கும் நீரே ஆதி கர்த்தா; நீர் ஸ்வயமாகவே (தாமாகவே) மூன்று லோகங்களுக்கும் ப்ரபு; திவ்ய ஜ்ஞாந முடைய மஹர்ஷிகள் நீர் ஶரண்ய ரென்றும் ஶரணம் என்றும் உரைத்தனர். 'நான் உமக்கு ஹ்ருதயம் (புத்ரன்); ஸீதை லக்ஷ்மீ; நீர் விஷ்ணு; ஜகத் முழுவதும் உமது ஶரீரம்' என்பது ப்ரஹ்ம ஸ்தோத்ரம். ஶரணாகதி ரக்ஷண ப்ரதிஜ்ஞையையே எடுத்து இந்த ச்லோகத்தில் காட்டுகிறார். வணங்கியவரை ரக்ஷிக்கும் தர்மத்தைத் தள்ளுபவர்பேரில் மிகச் சீற்ற மென்பதை முன்பாதியில் காட்டுகிறார். வாலிபேரில் இக்கோபமே அதிகம். அவன் ஶரணாகதனான ஸுக்ரீவனைக் கொல்ல முயன்றான். அதனால் அவனே முக்ய விரோதியானான். 'ஸூக்ஷ்மமான ஸத்துக்களின் தர்மம்' என்று வாலியிடம் கூறியது இந்தத் தர்மமே. வணங்கியதைத் திரஸ்கரித்து உத்ததனாயிருந்தான் கடலரயன்;

அவன்மீது 'ஸா மஸ ஶோஷயிஷ்யாமி' என்று கோபம் பிறந்தது. 'ஸமுத்ரம் ஶோஷயிஷ்யாமி வா வீர்யாத் உந்மத்தோ ஜாதிவா' என்று ராவணன் சொன்னதையும்,

'கூபஸ்ய யதி காகுத்ஸ்த: கிம் நு ஸாகர ஶேஷணாத் । ஸஹீம் தஹதி கோபேந யுகாந்தாக்நிரிவோத்தித:'

என்று ஸீதை ஹநுமாரிடம் கேட்டதையும், நடத்திக் காட்டவும் ஆசை. யுகாந்த ப்ரளயாக்நியாகவே ராம ஶரம் ஸமுத்ரத்தைத் தஹிக்க ஆரம்பித்தது. ராமன் மாநுஷ பாவநை செய்து வந்தாலும், அவர் ஶரம் ப்ரளயாக்நியின் வேலையைச் செய்து அவருடைய பரத்வத்தைக் காட்டிவிட்டது. 'ஸம்ஹர்த்ருஷு ஹரேண தாநு ஹநத்ராம' என்று பரத்வத்தைத் தன்னை யறியாமல் வெளியிட்டதும் ஶரணாகத ரக்ஷண விக்ந ஸம்ரம்பத்தில் தான். ஸமுத்ர ஜலத்தையும் கொளுத்தக் கூடியது பகவானுடைய ப்ரளய காலாநலம்தான். ஶரணாகதருடைய அகண்டமான பாபக் கடலைப் பகவான் கொளுத்தி ஶோஷணம் செய்வதையும் இந்த முன்பாதி ஒருவாறு ஸூசிக்கும். ஸமுத்ரராஜன் பேரில் கோபம் அத்யுக்ரமாய் மூண்டதை முன் பாதி வர்ணித்தது. அவன் தன் பத்நிகளான கங்காதி நதிகள் சூழ நடுவில் நின்று ஶரண மடைந்த க்ஷணத்தில் இத்தனை கோபமும் தணிந்து விட்டது. அவனுடைய ப்ருத்யன்போலப் பணி செய்யத் தொடங்கிய அவனுடைய ஶத்ருக்கள் பேரில் பாய்ந்தது. 'ஸவாம வதத்ர: ஶத்ருஷு ஹிநஸ்த்ஸ', 'விஶ்ரீநவாஸா தஜ்ஜீ:' என்று தயாஶதகம். ஸாகரத்தின் ப்ரளயம் போய், ராமனுடைய் ஸ்வாதந்த்ர்யத்திற்கு ப்ரளயம் வந்தது. ஸமுத்ரராஜன் எத்தனை அபராதியான அவஸ்தையோடு இருந்தாலென்ன? அவன் வாயால் 'ஶரணம்' என்றவுடன், தக்ஷணமே கோபம் நீங்கி அவனுக்குப் பணியாளனாகி, அவனுடைய ஶத்ருக்கள் பேரில் பாய்ந்து அவனுக்கு உபகாரப் பணி செய்தது. பின் பாதியில் ஸமுத்ரராஜன் ஶரணாகதியை எடுப்பதாகக் கொள்ளுவது மிக்க ரஸமே. 'ஸவத்ராவஸ்த' என்று அத்யுக்ரமான கோபத்திற்குப் பாத்ரமாகி ஶரத்தைத் தொடுத்துத் தண்டிக்கப்பட ஆரம்பித்திருக்கும் (ப்ராரப்தமான) அவஸ்தையில் ஸமுத்ரராஜன் இருந்தாலும் அந்தக் கொடிய ஆர்த்ராபராதாவஸ்தையி லிருந்தவனும் 'ஶரணம்' என்று படிந்த க்ஷணத்தில் அவன் பத்நிகளையும் அவனையும் ரக்ஷித்து, அவனுடைய ஶத்ருக்களை யொழித்து, தன் பாணத்தினிடமிருந்தும் அவர்களிடமிருந்தும் அவனுக்கு அபயம் தந்து ஸம்ரக்ஷணம் செய்வதையும் குறிக்கிறார். முன் பாதியில் கோபத்தின் உக்ரத்திற்குத் தக்கபடி உக்ர வர்ணநம்; பின் பாதியில் ஶாந்தி ரஸ காஷ்டையான வர்ணநச் சொற்கள். கோபத்தின் காஷ்டையும் ப்ரஸாதத்தின் காஷ்டையும் ஒரே விஷயமா யிருப்பது மிக்க ரஸம். அயோத்யா காண்டத்தில் 27-ம் ஸர்க்கத்தில் 'ஸவத்ராவஸ்தா மதாஹதத்ர: வாதஸ்ஸாயா விஶிஷ்யதே' என்பது ஸீதையின் வார்த்தை. 'ஸர்வாவஸ்தாவஸ்தாவி உதத்யம:' என்பது ஸ்ரீ கோவிந்தராஜர் உரை. மஹேச்வர தீர்த்தர் உரையும் அப்படியே. திலகர் வ்யாக்யாநத்தில் 'விஶேஷாணஹ்ஹிகாவஸ்தா ஸவத்ராவஸ்தேதி மீயதே' 'ஊதத்யஷி யாநாக' என்று ஒரு அபிதாந வசநமும் உதாஹரிக்கப்பட்டது. பரபத்தி

விஷயத்தில் இந்த ஶப்த ப்ரயோகம் மிகப் பொருத்தமுடையதாகும். 'ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் ஶரணாகத:' 'தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்' 'ஸக்ருதேவ' 'ஏகவ்ரதீ' என்று அபயப்ரதான ச்லோக ஸ்மாரணம். 'ராமோ விக்ரஹவாந்' என்று மாரீசன் ராவணனிடம் புகழ்ந்து பேசியது; தர்மமே வடிவெடுத்த மூர்த்தி; தர்மமே தர்மியுமாயிற்று. அதர்மக் கடலின் விரதி; ஶோஷணமே ஶரணாகதி பலன்.

ஸுமதி:—ராமன் ஸமுத்ரத்தில் ஸேது கட்டினதுபோல் நீரும் தர்ம ஸேதுவை ஸ்தாபிக்கிறீர்.

வ்யவஸாயன்:—இதோ பகவான் வாஸுதேவன் அவதார க்ஷணத்திலிருந்தே தன்னுடைய ராமத்தன்மையை ப்ரகாஶப்படுத்தினவர். ஸர்வ வேதாந்த ஸாரமான கீதோபநிஷதாசார்யன் ஸேவை ஸாதிக்கிறார். (கௌஸல்யா குமார பாவத்தால்) ராமன் காரணத்தன்மை மறைக்கப்பட்டது. இங்கே தேவகீ குமாரனாக அவதரிக்கையிலே ஶார்ங்க கதா சக்ரங்களோடு சதுர்புஜ ஸ்வரூபமாக ஸேவை. ஶங்க சக்ரங்களை ராம விக்ரஹத்தில் முதலில் பார்த்தவள் மந்தோதரீ; அதன்பிறகே ப்ரஹ்மாதி தேவர்கள் பார்த்தார்கள். மற்றவர்களுக்கு த்விபுஜமே.

கண்ணன் அவதார விஷயமான 'நாஸ்யாஸ்ய நந்தவம்ஶ ஹவது:' என்ற தஶாவதார ச்லோகம் ஆறுவது அங்கத்தில் வடமதுரை வர்ணனத்தில் படிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக இங்கே 'கம்ஸஸம்யம்யமௌகவீர:' என்று ஒரு ச்லோகம். ஸ்ரீ ஶங்கராசார்யருடைய ஹரிபாதாதி கேஶாந்த ஸ்தோத்ரத்தில்

"மத்ஸ்ய: கூர்மோ வராஹோ நரஹரிணபதி: வாமனோ ஜாமதக்ன்ய:
காகுத்ஸ்த: கம்ஸகாதீ மனஸிஜவிஜயீ யஶ்ச கல்கிர்பவிஷ்யந்"

என்று பகவதவதாரங்களைப் பாடியுள்ள ச்லோகம் ஸ்வாமி நெஞ்சில் உள்ளது. 'கம்ஸகாதீ' என்று அங்கே கண்ணனைக் குறித்ததுபோல, இங்கே 'கம்ஸஸம்யம்யமௌகவீர:' என்று படிக்கப்பட்டுள்ளது. கம்ஸ ஶப்தம் மஹா மோஹத்தைச் சொல்லுமென்று ஸ்ரீ விஜயத்வஜர் உரை. இங்கே முதல் அங்கத்தின் முடிவில்

"ஸம்ஸ்ருஷ்டோ வயோகீ ந ஸஹதா மோஹேந தூரேஸ்யஹா
கம்ஸேந வ்யூஹாநாம் தேந ஜவந: காராக்ருஹே ஸ்தாபித:"

என்று கம்ஸனை மஹா மோஹமாக ரூபணம் செய்யப்பட்டது. கீதோபநிஷத்தால் ஸர்வ தேஶங்களிலும் மோக்ஷ விரோதியான கம்ஸ மஹா மோஹனுடைய நிரஸந ஜயம் ஸித்திப்பதைக் காண்கிறோம். கீதையால் அத்யாத்ம ஜ்ஞானம் உலகமெங்கும் பரவியுள்ளது. மஹாமோஹமெப்படிப் பரந்துளதோ அப்படி அதை ஜயிக்கும் கீதோபநிஷத்தும் பரந்துள்ளது. [தொடரும்]

ஸ்ரீ :

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# மத்வதிகரணம்

[ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்யர், விஶிஷ்டாத்வைத வேதாந்த சிரோமணி, நெடுந்தெரு]

சாந்தோக்யோபநிஷத்தில் 3-வது ப்ரபாடகத்தில் ' அஸௌ வா ஆதித்யோ தேவமது: ' என்றாரம்பித்து, 1-வது கண்டம் முதல் பதினொரு கண்டங்களில் மதுவித்யை சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ருக்வேதம் முதலானவைகளில் சொல்லப்பட்டிருக்கும் யாகம் பஞ்சமஹாயஜ்ஞம் முதலான கர்மங்களில், மந்த்ர பூர்வமாக அக்நியில் ஹோமம் செய்யப்படும் அங்கம் ஆஜ்யம் முதலான ஹோம த்ரவ்யங்களுடைய ரஸங்கள் கிரணங்களின் வழியாக அம்ருத ரூபமாக ஸூர்ய மண்டலத்தில் வந்து சேர்கின்றன வென்றும், அதனால் ஸூர்ய மண்டலத்தில் சிவப்பு, வெளுப்பு, கறுப்பு, நீலம் பளபளப்பு என்னும் ஐந்து விதமான ரூபங்கள் காணப்படுகின்றன வென்றும், இந்த அழகான ரூபங்களை முறையே கீழ்ப்புறத்தில் வஸுக்களும், தென்புறத்தில் ருத்ரர்களும், மேல்புறத்தில் ஆதித்யர்களும், வடபுறத்தில் மருத்துக்களும், நடுவில் ஸாத்யர்களும் தேன்போலே ஆநந்தமாகப் பார்த்து அநுபவிக்கிறார்களென்றும், இப்படி வஸ்வாதி தேவதைகளால் அநுபவிக்கப்படுபவனும், காலையில் உதித்து மாலையில் மறைந்து உலகங்களுக்கு நன்மையைச் செய்பவனுமிருக்கும் ஸூர்யனையும் அவனுள் இருக்கும் பரமாத்மாவையும் தேன் போலே போக்யமாய் நினைத்து ப்ரீதியுடன் உபாஸநம் செய்தால் ப்ராரப்த கர்மாநுபவம் முடிந்ததும், கொஞ்ச நாள் வஸ்வாதி பதங்களில் இருந்துவிட்டுக் கடைசியில் ஶாச்வதமான மோக்ஷ பதத்தை அடையலாம் என்று பத்து கண்டங்களில் சொல்லப்பட்டிருக்கும் உபநிஷத்துக்களுக்கு அர்த்தம் என்று ஸ்ரீ பாஷ்யம் மத்வதிகரணத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உபநிஷத் பாஷ்யத்திலும் இப்படியேதான் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு பதினோராவது கண்டத்தில்

" அத தத ஊர்த்வ உதேத்ய நைவோதேதா நாஸ்தமேதா ஏகல ஏவ மத்யே ஸ்தாதா ததேஷ ஶ்லோக: "

என்கிற வாக்யத்தால் ' உலகத்துக்கு வெளிச்சம் கொடுத்து உபகரிக்கும் கார்யமும் உதித்து மறைதல் என்பதும் இல்லாமல் ஒரே நிலைமையுடன் இருக்கும் ஸூர்யனையும் அவனுள் இருக்கும் அந்தராத்மாவையும் ப்ரீதியுடன் உபாஸநம் பண்ணினால் சாச்வதமான மோக்ஷ பதத்தை அடையலாம் ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த " அத தத ஊர்த்வ உதேத்ய—ஶ்லோக: " என்கிற உபநிஷத் வாக்யத்துக்கு ஸ்ரீ பாஷ்யத்தில் மத்வதிகரணத்தில், ' காரணாவஸ்தையில் இருக்கும் ஸூர்ய ஜீவாத்மாவையும் அவனுள் இருக்கும் பரமாத்மாவையும் உபாஸித்தல் அர்த்தம் ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ச்ருத

ப்ரகாசிகையில் 'காரணவஸ்தை என்னும் ஸ்ரீ பாஷ்யத்துக்கு ஸ்ருஷ்டிக்கு முன்னல் ஸூர்யன் என்னும் நாமமும் ரூபமும் இல்லாமல் இருக்கும் ஸூர்ய ஜீவாத்மாவையும், அவனுள் இருக்கும் பரமாத்மாவையும் உபாஸித்தல்' என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. உபநிஷத் பாஷ்யத்திலோ வென்னில், இந்த உபநிஷத் வாக்யத்துக்கு முன்னல் பத்துக் கண்டங்களால் கார்யாவஸ்தையுடன் கூடிய ஸூர்யனேயும் அவனுள் இருக்கும் அந்தராத்மாவையும் உபாஸித்தலேச் சொல்லிவிட்டு " ஃயதத ஊஜ்வ உஜெதூ " என்று இந்த உபநிஷத்தில் கார்யாவஸ்தைககுப் பிற்பட்ட காலத்தைக் குறிக்கும் 'ஃய' ஶப்தம் உபயோகிக்கப்பட்டிருப்பதால், இப்பொழுது கார்யாவஸ்தையில் இருக்கும் ஸூர்யன் இதற்குப் பிறகு முக்தாவஸ்தையை அடைந்தும், அந்த முக்தாவஸ்தையுடன் கூடிய ஸூர்யனேயும் அவன் அந்தராத்மாவையும் உபாஸித்தலேத்தான் இந்த உபநிஷத் வாக்யம் தெரிவிக்கிறதே தவிர, இப்பொழுதுள்ள கார்யாவஸ்தைக்கு முன் ப்ரளய தசையில் காரணவஸ்தையோடு நாம ரூபங்களில்லாமல் இருந்த ஸூர்யனேயோ அவன் அந்தராத்மாவையோ உபாஸித்தலேத் தெரிவிக்க மாட்டாது என்றும், அதனல் ஸ்ரீ பாஷ்யத்தில் காரணவஸ்தை என்று சொன்னதற்கும் கார்யாவஸ்தைக்கு மாறுதலான அவஸ்தை [அதாவது முக்தாவஸ்தை] என்று கௌணமாக அர்த்தம் கொள்ளவேணுமேதவிர 'ஸ்ருஷ்டிக்கு முன்னல்' என்று ச்ருதப்ரகாசிகையில் அர்த்தம் பண்ணினது உசிதம் இல்லே என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

உபநிஷத் பாஷ்யகாரரின் திருவுள்ளத்தின்படி, காரணவஸ்தை என்பதற்குக் கார்யாவஸ்தைக்கு மாறுதலான முக்தாவஸ்தை என்று தாத்பர்யமாயிருந்தால் "ஷூாயதெ ஶபவூயொமெ" என்ற ந்யாயத்தின்படி ஸ்ரீ பாஷ்யத்தில் காயஷாவஸூா என்ரே உக்தாவஸூா என்ரே உபயோகிக்கப்பட்டிருக்கலாம். ஸம்ப்ரதாய க்ரமமாகக் கேட்ட அர்த்தத்தைப் பட்டோலேகொண்டு அதனல் ச்ருதப்ரகாசிகை என்று திருநாமம் வைக்கப்பட்டிருக்கும் ச்ருதப்ரகாசிகையிலாவது அவ்விதம் முக்தாவஸ்தாபரமாக வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கலாம். அப்படி யில்லாமல் ப்ரளயாவஸ்தாபரமாகவே அர்த்தம் செய்திருப்பதால், இந்த உபநிஷத் வாக்யத்துக்கு, ஸ்ரீ பாஷ்யத்தின்படிக்கும் ச்ருதப்ரகாசிகையின்படிக்கும் ப்ரளயாவஸ்தையில் இருக்கும் ஸூர்ய ஜீவாத்மாவையும் அவனுள் இருக்கும் பரமாத்மாவையும் உபாஸிக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. உபநிஷத் பாஷ்யத்தின்படி முக்தாவஸ்தையில் இருக்கும் ஸூர்ய ஜீவாத்மாவையும் அவனுள் இருக்கும் பரமாத்மாவையும் உபாஸிக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. இப்படி இந்த இடத்தில் ஸ்ரீ பாஷ்ய ச்ருதப்ரகாசிகையும் உபநிஷத் பாஷ்யமும் ஸாமரஸ்ய மன்றியில் முரண்பட்ட அபிப்ராய முள்ளவைகளாக இருக்கின்றன.

மேலும், இப்பொழுது கார்யாவஸ்தையில் இருக்கும் ஸூர்யன், இந்த ப்ருஹ்ம திவஸத்தின் முடிவிலேயே மோக்ஷம் அடைந்துவிடுகிருர் என்று நியமம் சொல்ல முடியாது. ப்ராரப்த கர்ம வைசித்ர்யத்தாலே இதற்குப் பிறகு

வரும் நைமித்திக ப்ரளயத்தில் இந்த ஸூர்யன் நாமரூபங்களை இழந்து ஸூக்ஷ்ம தசையை அடைந்து அந்த ப்ரளயத்துக்குப் பிறகு வரும் ப்ருஹ்ம திவஸத்தில் மறுபடி ஸூர்யன் என்னும் நாமாவையும் ரூபத்தையும் அடைந்து உதயாஸ்தம யாதி கார்யங்களுடன் இருந்து அந்த ப்ரும்ஹ திவஸத்தின் முடிவில் மோக்ஷம் போகலாம். அல்லது இந்த ப்ருஹ்ம திவஸத்தின் முடிவிலேயே இந்த ஸூர்யன் மோக்ஷம் அடைந்து விடுவதாக வைத்துக்கொண்டாலும், இதற்குமுன் கண்டங்களில் இந்த மது வித்யையில், ஸூர்யன் தெற்கே உதித்து வடக்கே அஸ்தமிப்பதாக ச்ருதியானது கல்பித்துச் சொன்னதுபோல், வரப்போகும் ப்ரளயத்தில் இந்த ஸூர்யன் உலகத்துக்கு வெளிச்சம் கொடுத்தல் உதித்து மறைதல் முதலான கார்யங்கள் இல்லாமல் ஒரே ஸ்வபாவத்துடன் ஸூக்ஷ்ம தசையோடு இருப்பதாகக் கல்பித்துச் சொல்வதாகவும் சொல்லலாம். ஆகையால் வரப்போகும் ப்ரளயாவஸ்தையில் நாமரூபங்கள் இல்லாமல் உதயாஸ்தம யாதி கார்யங்களும் இல்லாமல் இருக்கும் இந்த ஸூர்ய ஜீவாத்மாவையும் அவனுள் இருக்கும் பரமாத்மாவையும் உபாஸித்தலை இந்த 'அத தத ஊர்த்வ உதேத்ய' என்கிற உபநிஷத் வாக்யம் சொல்லுவதாக இந்த வாக்யத்துக்கு அர்த்தம் சொன்னால் இந்தக் கார்யாவஸ்தைக்குப் பிற்பட்ட காலத்தைச் சொல்லும் 'அத' சப்தத்துக்கும் ஸ்வரஸமான அர்த்தம் கிடைத்து விடுகிறது. ஸ்ரீ பாஷ்யத்தில் காரணாவஸ்தை என்று சொன்னதற்குக் 'கார்யத்துக்கு மாறுதலான முக்தாவஸ்தை' என்று கௌணமாக அர்த்தம் சொல்லவும் வேண்டியதில்லை. ஏனெனில், இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் கார்யாவஸ்தைக்குப் பிறகு வரப்போகும் ப்ரளய தசையானது அந்த ப்ரளய தசைக்குப் பிறகு வரும் ப்ருஹ்ம திவஸத்தில் ஏற்படும் ஸ்ருஷ்டிக்குக் காரண தசையாகையாலே வரப் போகும் ப்ரளய தசையைக் காரணாவஸ்தை என்றும் ஸ்ருஷ்டிக்கு முன் நாம ரூபங்கள் இல்லாமல் இருக்கும் நிலைமை என்றும் முக்யமாகவே சொல்லக் கூடுமாகையால், ஸ்ரீ பாஷ்யத்தில் காரணாவஸ்தை என்று சொன்னதற்கும் ச்ருதப்ரகாசிகையில் ஸ்ருஷ்டிக்குமுன் நாமரூபங்கள் இல்லாமல் இருக்கும் ஸூர்ய ஜீவாத்மாவும் அதனுள் இருக்கும் பரமாத்மாவும் என்று வ்யாக்யானம் செய்ததற்கும் நிரம்ப பொருத்தமாகவும் போய்விடுகிறது.

இப்படி இந்த உபநிஷத் வாக்யத்தில் உள்ளதும் கார்யாவஸ்தைக்குப் பிற்பட்ட காலத்தைக் குறிப்பதுமான 'அத' சப்தத்தின் அர்த்த ஸ்வாரஸ்யத்துக்கு விருத்தமாக இந்த உபநிஷத் வாக்யத்துக்கு இப்பொழுதுள்ள கார்யாவஸ்தைக்கு முன்புள்ள காரணாவஸ்தாபரமாக அர்த்தம், ஸ்ரீ பாஷ்யத்திலோ ச்ருதப்ரகாசிகையிலோ வ்யக்தமாகச் சொல்லப்படவில்லை. ஸ்ரீ பாஷ்யத்தில் காரணாவஸ்தை என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறதே தவிர 'இதற்கு முன்புள்ள காரணாவஸ்தை' என்று சொல்லவில்லை. ச்ருதப்ரகாசிகையிலும், காரணாவஸ்தை என்னும் ஸ்ரீ பாஷ்யத்துக்கு "கார்யாவஸ்தைக்கு அவச்யாபேக்ஷிதமான முன்புள்ள நிலைமை" என்று அர்த்தம் தெரிந்துகொள்வதற்காக ப்ரளயாவஸ்தை என்பதற்குப் பர்யாயமாக 'ஸ்ருஷ்டிக்கு முன் நிலைமை' என்று பொதுவாக வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, 'இந்த

ஸ்ருஷ்டிக்கு முன் நிலைமை' என்று விசேஷித்துச் சொல்லவில்லை. அதனால்

"இதாநீம் ஸூர்யாதி நாமரூபவத்வாபி ஸர்வேஷு ப்ரளயே ஸூர்யாதி நாமரூபரஹிதஜீவாத்மந: அந்தர்யாமிப்ரஹ்ம காரணாவஸ்தம் தது உபாஸநம் விதீயதே இத்யர்த:"

என்கிற ச்ருதப்ரகாசிகா வாக்யத்துக்கு இப்பொழுது ஸூர்யாதி நாம ரூபங்களோடு இருந்தாலும், ப்ரளய தசையில் அந்த நாம ரூபங்கள் இல்லாமல் இருக்கும் ஸூர்ய ஜீவாத்மாவுக்கு அந்தராத்மாவை உபாஸநம் செய்யவேண்டும் என்று பொதுவாக அர்த்தம் ஏற்படுகிறதே, தவிர, இதற்கு முன்புள்ள ப்ரளயாவஸ்தை என்று ஏற்படவில்லை. ஆகையால் இந்த உபநிஷத் வாக்யத்துக்கு வரப்போகும் ப்ரளயாவஸ்தையில் உள்ள ஸூர்ய தத³ந்தராத்மோபாஸந பரமான அர்த்தமே ஸ்ரீ பாஷ்யகாராதி ஸம்மதம் என்று சொல்வதில் யாதொரு பாதகமும் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்படி இந்த உபநிஷத் வாக்யத்துக்கு, ஸ்ரீ பாஷ்யகாரருடையவும் ச்ருத ப்ரகாசிகாசார்யருடையவும் ஸூக்திகளுக்கு அநுகுணமாகவும் உபநிஷத்தில் உள்ள 'அபி' சப்தத்தின் அர்த்த ஸ்வாரஸ்யத்துக்கு விரோதமன்றியிலும் வரப்போகும் ப்ரளயாவஸதையில் உள்ள ஸூர்ய தத³ந்தராத்மோபாஸந பரமாக அர்த்தம் பண்ணுமல், முக்தாவஸ்தையில் உள்ள ஸூர்ய தத³ந்தராத்மோபாஸந பரமாக உபநிஷத் பாஷ்யகாரர் அர்த்தம் பண்ணியிருப்பதற்கு

"ஸ்வதந்த்ரஸ்ய உபேக்ஷா நியோக்தும் நார்ஹதி"

என்கிற ந்யாயத்தைத் தவிர வேறு காரணம் ஏதாவது இருக்குமானாலும், ஸ்ரீ பாஷ்ய ச்ருத ப்ரகாசிகைக்கும் உபநிஷத் பாஷ்யத்துக்கும் ஸாமரஸ்யம் சொல்ல முடியுமானாலும் அவைகளை ஸஹ்ருதயர்களான பண்டிதர்கள் இந்த ந்ருஸிம்ஹ ப்ரியா வாயிலாக வெளியிடவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# மதுராலாபம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M. A., வித்வான், L. T., திருவையாறு.]

இத்தகைய கர்வத்தினல் பீடிக்கப்பெற்றவர் நஞ்சுண்டவர்போல் நலிவுறுவர். கண்ணிருந்துங் காணர். வாயிருந்தும் பேசார். தன் நிலைமையிற் பெருஞ் சோர்வு கொண்டு நிற்பர். இப்படிப்பட்ட கர்வங் கொண்ட ஒரு மன்னனது சரிதம் — வாழ்க்கையில் உண்மை நிகழ்ச்சி—நமக்கு நம் வாழ்க்கையாகிற பாதையில் பேரொளி வீசி நலம் விளைவிக்குமென் றெண்ணுகிறேன்.

பாண்டியன் 'பார் தொழு பங்கயத்தாளன் ஜடிலகேஸரி வீரவன்மன்' என்பான் சேர சோழர்களைத் தன் அடிப்படுத்தி, மற்றை மன்னர்களைத் தனக்குத் திறை செலுத்தச் செய்து, பாண்டி மண்டலத்தை வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் கொண்டு ஒப்பற்ற ஆற்றலுடன் புரந்து வந்தான். இவனது நீண்ட பெயரைச் சுருக்கி 'வீரவன்மன்' என்றே கூறுவோம். நெடிய உருவம். ஒப்பற்ற அழகு. பருத்துத் தசை தடித்துப் பாறைகளையும் உடைக்க வல்ல வலிமை பூண்ட கைகள். குன்று கொடு சமைத்த தன்ன திண் தோள்கள். இடியின் வீழ்ச்சியைத் தாங்கி நிற்கவல்ல மார்பு. உருவெடுத்த மன்மத னெனப் பகரத்தக்க எழில். இப்படிப்பட்ட மன்னன் உலகமாளும் பெருமையால் எல்லையற்ற கர்வம் கொண்டான். இவ்வுலக கெல்லாம் ஆக்கி அளித்து அழிக்கும் அரும்பொருள் ஒன்று உண்டு என்பதை நினைக்கவே கூசினன். "நான் முனிந்தால் வானம் வெடிக்கும்; வையகமே கிடுகிடுக்கும்; ஆழி அலறும்; அணி உடுக்கள் (நக்ஷத்ரங்கள்) தாம் உதிரும்; காலுங் காலழியும்; கதிரவனு மொளி குன்றும்; தீயுங் குளிர்ந் தொடுங்கச் செம்மதியு மின்றேங்கும்; இது நிற்க: ஈச்வரன் என்பான் யார்? என்ன பைத்தியம்?" என்பான். தனக்கு நிகர் இப்பதினுன்கு உலகிலு மில்லை யெனத் துணிந்தான். தன் பட்டத்தரசியான பாலன்ன மென் மொழியாள் சிறந்த ஓர் அரச குலத் துதித்தவளாயினும், சிறந்த வடிவழ குடைய வளாயினும், உலகம் போற்றத்தக்க உத்தம குண முடையவளாயினும், தன்னுடன் அவள் அமர்ந்திருக்க வேண்டிய ஸந்தர்ப்பங்களில், (அதாவது: அரசனது அவைக்களக்கொலு மண்டபத்தில்) பலர்காணும் ஸந்தர்ப்பங்களில், அப்பெருமாட்டியைத் தன் அரியணையில் உடன் அமர்த்திக்கொள்ளாது, தன் பாத பீடத்தின் அருகில் வீற்றிருக்குமாறு பணிப்பான். இவ்வாறு எல்லையற்ற கர்வத்துடன் ராஜ்யபாரம் நடத்திவந்த இம்மன்னனை வணங்கி நல்வழி காட்ட இறைவனும் திருவுள்ளங் கொண்டனன் போலும்!

பாண்டியர் தலைநகராகிய மதுரா நகரத்திலிருந்து இரண்டு க்ரோச தூரத்திலிருந்த இருள் அடர்ந்த காட்டிற்கு மன்னன் வேட்டையாடப் புறப்பட்டான். வெகு நேரம் வேட்டையாடினன். வெகு மூர்க்கமாக எதிர்த்த ஓர் முட்பன்றியை எதிர்த்துக் கறுவிப் போராடித் துரத்திச் செல்லுங்கால் தன் பரிவாரத்தை முற்றும் பிரிந்தான். பன்றியும் விரைந்து சென்று மறைந்தது. ஏமாற்ற மடைந்த மன்னன் தன் குதிரையை விட்டுக் கீழிறங்கிச் சுற்றிலும் நோக்கினன். இருண்ட காட்டைக் கடந்து வைகை நதியின் பக்கலில் ஓர் நெடிய மைதான ப்ரதேசத்தை அடைந்து விட்டதாகக் கண்டான். மதுரை நகரம் நாலைந்து க்ரோச மிருக்கலாம். கண்ணுக் கெட்டியமட்டும் நகரமோ க்ராமமோ புலப்படவில்லை. களைத்துப்போன குதிரையை ஓர் மரத்தில் கட்டினன். மிகவும் வாடி வியர்த்து நொந்துபோன தன் உடலை ஆற்றில் நீராட்டி இன் புறுத்த எண்ணினன். தன் விலையுயர்ந்த பட்டாடைகள், முத்து மரகதத் தொங்கல்கள், பைம்பொன் ஆபரணங்கள் இவற்றைக் கழற்றி ஓரிடத்தில் வைத்து, ஒரு சிறு அரையாடை யணிந்து ஆற்றில் மூழ்கினன்.

நடுப் பகல். கதிரவன் பொறுக்கொணு வெம்மையுடன் தீயை வாரி வீசுவது போல் தன் கதிர்களைப் பெய்தனன். தண்ணென்ற வைகையின் புனலிற் படிந்த மன்னன் ஆற்றின் புனலை வாயார வாழ்த்தி மூழ்கினுன். சற்று நேரம் நீராடி எழுந்த மன்னன் கரையில் தன் ஆடைகளைக் கண்டானில்லை. தன் மணியாரங்களையும் கண்டானில்லை. "என்ன தைர்யம்? வீரவன் மனது ஆடையைக் கவர்ந்தவன் எங்குச் செல்வான்? வான உலகம் சென்றுலும் அவனை விடாது துரத்தி உயிருடன் எரிப்பான்" என்று வஞ்சினம் கூறி, 'கடுங்கால்' 'கடுங்கால்' எனறு தன் குதிரையை விளித்தான். வீரவன்மனது குரல் கேட்டபொழுதே கனைக்கும் இயற்கையுள்ள அக்குதிரையின் பழகிய குரலொலியைக் கேட்டானில்லை. "ஆஹா! என் குதிரையை அழைத்துச் செல்ல இமையவரும் நடுக்க முறுவரே! இது யார் செய்த வேலை?" என்று தன் பற்களைக் கடித்தான்.

உலக மாளும் மன்னவனுக்கும் பசி உண்டல்லவா? மன்னன் தைர்யத்தை விடாது, நடந்து தன் ராஜதானியை அடைந்துவிடலா மென்று துணிந்தான். வேகமாக நடந்தான். மந்த்ரிகள் ப்ரதானிகள் நண்பர்கள் பெயரையெல்லாம் உரக்கக் கூப்பிட்டான். எனென்று கேட்பவர் யார்? இவன் நடக்கும் வழியில் ஈ காக்கையும் தென்படவில்லை. நடந்தறியா னுகையால் களைப்பு மேலிட்டுத் தாஹம் வாட்ட ஆரம்பித்தது. ஆயினும் வேகத்தை விடாது நடந்த மன்னன் வழி தவறினுன். நடக்க நடக்க ஜனப் பழக்கமில்லாத அரண்யமே தொடர்ந்து வந்தது. வர்ணித்துப் பயனென்? கதிரவன் தன் வெம்மை மாறி மேல் வானத்தில் தணிந்தான். மாலைக் காலம் வந்தது. மன்னவனும் நடந்தான். 'மதுரையை மாத்ரம் அடைந்து விட்டால் தன்னைத் தனியே விட்டுச் சென்றவர்களைச் சுட்டு மாய்த்துவிடுவேன்' என்று வஞ்சினம் கூறினுன். அவன் உடல் முட்புதர்களால் கிழிக்கப்பெற்றது. சிறிய அரை ஆடை மாசுற்றது. கண்கள் நெருப்புப்போல் சிவந்தன. வாய் வறட்சியால் உலர்ந்தது. வேகமாக நடந்த மன்னனது ஆடை ஓர் முட்புதரில் சிக்கிக் கிழிவுண்டது. அரசன் வருந்தினுன். அதைச் சற்று கிழித்துக் கோவணமாகக் கட்டிக் கொண்டான். அவன் அடைந்த வெட்கமும் கோபமு துயரமும் எல்லையற்றதாயின. ஆயினும் மன்னன் நடந்தான்.

இரண்டு மனிதர் விறகு சுமை சுமந்து நின்றனர். இவனை வெகு வியப்புடன் நோக்கினர். அரசன் ஆவலுடன் அவர்கள் எதிரில் நின்று 'என்னை அறியீர்களா?' என்றுன். விறகு வெட்டிகளில் ஒருவன் 'போகிற வருகிற பைத்யக்காரர்களை யெல்லாம் நாங்கள் அறிய முடியுமா?' என்று சிரித்தான். அரசன் சீற்றங்கொண்டு, வழக்கப்படி பட்டாக்கத்தியை நாடிய முறையில் கையை இடுப்பில் செலுத்தித் தடவினுன். பட்டாக்கத்தி யில்லை. என் செய்வான்? "டேய்—காட்டு மனிதனே! நான் யாரென்றறியாய் போலும்! நான்தான் உங்கள் அரசன் வீரவர்மன்" என்று சொல்லிக் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றுன். விறகு சுமையன் கையிலிருந்த தடியினுல் அரசன்

தோளில் அடித்து, 'சீ முட்டாள்! கோவணதாரியான நீயோ உலகாளும் வீரவன் மன்! காவலர் யாரேனும் கேட்பின் உன்கதி அதோகதிதான். உன் அத்ருஷ்டந் தான் மதுரை இன்னும் அரைக் ரோச தூரம் இருக்கிறது' என்று சொன்னான். இருவரும் கடகடவென்று சிரித்தவண்ணம் வேகமாய்ச் சென்றார்கள். அரசன் ஸ்தம்பித்து நின்றான். பசி ஒருபக்கம். தாகம் ஒருபக்கம். அவமானம் ஒரு பக்கம். "ஆகா! நான்மாத்ரம் மதுரை சேரட்டும். என்ன பாடு படுத்து கிறேன் பார். நான் கோபித்தால் ப்ரளய காலமல்லவா உண்டாகும்? நபும்ஸக நாய்களா! நன்றி கெட்ட பேய்களா!" என்று காலைப் பாறை நிலத்தில் அறைந்தான். களைப்பு மேலிட்டுக் கீழே விழுந்தான்.

களைப்பினால் சற்று மெய்ம் மறந்த மன்னன் மறுபடியும் உணர்ச்சி யுற்றான். தள்ளாடித தள்ளாடி நடந்தான். 'என் செய்வது?' வேட்டையில் உற்ற நண்பரைப் பிரிந்தோம். வழி தவறினோம். மதுரை வீதிகளில் தலை நீட்டினால் போதாதோ? மதுரை நகரமே திரண்டு என் காலில் அல்லவா விழும்' என்று சொல்லிக்கொண்டான். பிறகு தன் கோவணம் அணிந்த உடலை நோக்கினான். வெட்கம் தாங்க முடியவில்லை. மதுரை நெருங்கியது. கையுந் தடியுமாய் ஒரு மனிதன் நகர் நோக்கி நடந்துகொண்டிருந்தான். அவனை அரசன் நெருங்கினான்.

கம்பீரமான குரலில் (அரசன் இரந்தே பழக்கமில்லை யாகையால்) "உனது உத்தரீயத்தைக் கொடு. எனக்கு வேண்டும். யான் இத் தேசத்து மன்னவன்" என்றான். அந்த மனிதன் குலுங்கக் குலுங்க நகைத்து, "நீயா பாண்டிய பூபதி வீரவன்ம மஹாராஜன்! ஆஹா! நீ பரதேசி என்று எண்ணி என் ஆடையைத் தருவதா யிருந்தேன். நீ பைத்யக்கார அடிமுட்டாள்! இறைவனான வீரவன்மனின் பெயரை மற்றொருதரம் உச்சரித்தாயானால் இதோ இந்தத் தடியால் உன் மண்டையை உடைப்பேன். உனக்கு யான் ஆடை தருவதில்லை. பாண்டிய பூபதியா நீ?" என்றான். மறுபடியும் குலுங்கக் குலுங்கச் சிரித்தான். ராஜமார்க்க மாகையால் பலர் கூடிவிட்டனர். கலகல வென்று தன்னைப்பற்றிய பேச்சைக் கேட்டவுடன் அரசன் விரைந்து அவர்களை விட்டு ஓடினான். கால்கள் தள்ளாடின. கண் சுழன்றது. சாலையோரம் ஒரு குளக்கரையில் உட்கார்ந்தான்.

அப்பொழுது நிர்மலமான ஆகாயத்தில் தண்மதி எழுந்தான். ஜில்லென்ற தன் கிரணங்களை மதுராபுரியின் வெள்ளிய ஸுதை மாடங்கள் மீதும், விரிந்த தெருக்களிலும், பளிங்கன்ன வாவிகள் மீதும், பசிய நந்தவனங்கள் மீதும், ஓங்கிய கோபுரங்களிலும், ஒளிரும் கலசங்களிலும் பரப்பிப் பால்போன்ற வெள்ளத்தைப் பெருக்க விட்டனன். அரசன் மதி மயங்கி உட்கார்ந்தான்.

"அரண்மனை வாயில் போய்விட்டால் இக்கஷ்டம் நீங்கும். பசி பொறுக்க முடியவில்லையே! ஜக வீரவன்மனுக்கா பசி! பரகேசரிக்கா பசி! அரிமர்த்தனனுக்கா பசி! அவனிபூப குலோத்தம்ஸனுக்கா பசி! சீ சீ" என்று

சிரித்தான். பக்கத்தில் ஒரு மூட்டையை அவிழ்த்துக்கொண்டிருந்த பரதேசி, "யாரப்பா இப்படிச் சிரிக்கின்றனை?" என்ருன். அரசன் தன் ஆயுளிலேயே முதல் தரம் வணக்கத்துடன், 'ஐயா ஒரு பழந்துணி கொடுங்கள்; உடுக்க உடையில்லை' என்ருன். பரதேசி ஸந்தோஷத்துடன் 'உலகெல்லா மாக்கி அளிக்கும் எம் புருஷோத்தமன் அருள் உனக்குக் கிட்டுவதாக' என்று சொல்லி ஒரு பழந்துணியைக் கொடுத்தான். அரசன், கிழிந்ததும் துர்க்கந்தம் வீசுவதுமான அக்கந்தையை ஓர் பீதாம்பரமாக மதித்து ஆவலுடன் வாங்கி அணிந்தான். 'பரதேசி! நம் அரண்மனைக்கு நாளை வா! உனக்குத் தக்க ஸம்மானம் செய்கிரேம்' என்ருன். பரதேசி திடுக்கிட்டு 'நீ யாரப்பா!' என்ருன். அரசன் 'என்னையறியாயா? நான் தான் வீரவன்மன்!' என்ருன். பரதேசி சிரித்தான் "ஏ! பித்துக்கொள்ளி! உடையற்று நாணி நின்றனையென்று உடை கொடுத்தால் உன் உளறல்களையெல்லாம் பொறுத்துக்கொண்டிருப்பேனென்று நினைத்தாய்? சீ போ! உன் பவிஷுக்கு உலகமாளும் பாண்டிய மன்னனின் அரண்மனைதான் கிடைக்கும்" என்ருன். அரசன் மனம் புண்பட்டது. 'பரதேசி! நாளை என் ஸேவகரால் சிரச்சேத மடைவாய்' என்று சீறினன். பரதேசி, 'மதிகேடா! நான் உண்ணவேண்டும்; அப்பால் போகிருயா? ஓர் கல்லை எடுத்து வீசட்டுமா?' என்ருன். அவன் கண்களில் தீப்பொறி பறந்தது. அரசன் வ்யஸத்துடன் நகர்ந்தான்.

[தொடரும்]

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஜந்மாதி ஸூத்ர லக்ஷண விசாரம்

[ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி, பம்பாய்]

"'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரத்துக்கு விஷய வாக்யமான 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' இத்யாதி ச்ருதி வாக்யங்கள் ப்ரஹ்மத்துக்கு ஜகத் காரணத்வத்தைச் சொல்லுகிறபடியால், அந்த வாக்யத்தை விஷயமாக உடைய இந்த ஸூத்ரம் எப்படி ப்ரஹ்மத்துக்கு நிமித்த காணத்வத்தை ஸாதித்துக் கொடுக்கிற தென்று சொல்லக் கூடும்? நிமித்த காரணம் விஶிஷ்ட ப்ரஹ்ம நிஷ்ட மன்றே; விஶேஷ்ய பூத சுத்த ப்ரஹ்ம நிஷ்ட மன்ரே? சுத்த ஸ்வரூப நிஷ்டமா யிராத ஜகத் காரணத்வம் எப்படி அந்த ஸ்வரூபத்துக்கு லக்ஷண மாகும்? வஸ்துவின் அஸாதாரண தர்ம மன்ரே அந்த வஸ்துவின் லக்ஷணமாகச் சொல்லப்படக்கூடும்?" என்பது ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமியின் கேள்வி.

ஸமாதாநங்கள்:—

நம் ஸித்தாந்த ரீதியாக விஶிஷ்ட ப்ரஹ்மம்தான் ஜிஜ்ஞாஸ்யம். ஸாதாரணமாக நிமித்த காரணத்தின் லக்ஷணம்

ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ப்ரஹ்மத்துக்கு நிமித்தோபாதாநத்வ ஸித்தி ஏற்படு வதைக் காணலாம்.

இப்படியிருக்க, ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி அபிப்ராயப்படி சுத்த ஸ்வரூப நிஷ்டமான அஸாதாரணமான நிமித்த காரணத்தை மாத்ரம் லக்ஷணமாகச் சொன்னால், முமுக்ஷுவுக்கு ஜிஜ்ஞாஸ்யமான விசிஷ்ட ப்ரஹ்ம ப்ரதீதி ஏற்பட வேண்டு மென்கிற நியமத்துக்கு மாருகவும் போய்விடலாம். நிமித்த காரணத்தை மட்டில் சொன்னால் உபாதாநத்துக்கும் ப்ரதீதி ஏற்படவேண்டிய நியமமில்லை.

எந்த லக்ஷணத்தைச் சொன்னால் விசிஷ்ட ப்ரஹ்ம மென்ன, விசேஷ்ய நிஷ்டமான நிமித்த மென்ன இவ்விரண்டும் உபபாதிக்கப்பட்டதாகுமோ, அந்த லக்ஷணத்தை 'ஜந்மாத்யஸ்ய யதஃ' என்கிற ஸூத்ரத்தால் சொல்லியிருப்பது அத்யந்தம் ஸாது.

மேலும் இந்த ஸூத்ரத்துக்கு விஷய வாக்யமான

'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி'

என்கிற வாக்யங்களில் 'யதஃ' என்பதற்கு 'யஸ்மாத்' என்று வ்யாக்யாநம் செய்து, 'யஸ்மாத்ஃ ஜந்மஸ்திதிலயாஃ தத்ப்ரஹ்மேதி' என்று ஸாதித்து மேலே விவரிக்கிருர்.

'ஜந்மஸ்திதிலயா ஸ்வநிமித்தோபாதாநபூதம் வஸ்து ப்ரஹ்மேதிலக்ஷயந்தி'

ஆனதால் 'யதோவாஇமாநி' என்கிற வாக்யத்தில் 'யதஃ' என்பதற்கு 'யஸ்மாத்ஃ' என்கிற வ்யாக்யாநத்தால் நிமித்தம் உபாதாநம் இரண்டையும் சுட்டிக் காட்டுகிறதென்று இருப்பதால் இந்த ஸூத்ரம் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமி கேட்டபடியுள்ள விசேஷ்ய நிஷ்டமான அஸாதாரண லக்ஷணமான நிமித்தத்தையும் முமுக்ஷுவுக்கு ஜிஜ்ஞாஸ்யமான விசிஷ்ட ப்ரஹ்ம நிஷ்டமான உபாதாநத்தையும் குறிப்பதால் அது ரொம்பவும் யுக்தமானதே.

வேதாந்த ஸாரத்திலும் ஸ்வாமி பாஷ்யகாரர் மேலே சொன்ன பாவத்தை ஸாதித்திருக்கிருர். ஆனது பற்றி ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் எது என்கிற 'யதோவாஇமாநி' இத்யாதி வாக்யத்தை விஷயமாக உடைய ஸூத்ரம் 'ஜந்மாத்யஸ்ய யதஃ' என்றிருப்பதாலேதான் நம் ஸித்தாந்தத்துக்கு அநுகுணமாக பாஷ்ய வ்யாக்யாநாதிகள் செய்ய நம் பூர்வாசார்யர்கள் திருவுள்ளத்துக்கு உபபந்நமாகவேயிருக்கிறது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 NOV 1948

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# திருக்கண்டியூர்

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A. மேல் மாம்பலம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

ரதோத்ஸவம் ஸேவிப்பதற்காகக் கிளம்பிய நாங்கள் வழியில் பார்த்த ப்ருகு மஹர்ஷி மண்டபம் ஏதேதோ பழைய எண்ணங்களைக் கிளப்பிவிட, அவற்றில் மனத்தைச் செலுத்திவிட்டோம். இன்றைய சூழ்நிலையை விட்டு விட்டு, அநேக யுகங்களுக்கு முன் இருந்த ஒரு சூழ் நிலையில் ஸஞ்சரித்தோம். இவ்வாறு வெகுநேரம் இருந்துவிட்டோம். இன்னும் எவ்வளவு நேரம் இருந்திருப்போமோ தெரியாது. அப்போது டபார்! டபார்! என்று கேட்ட அதிர்வெடி சப்தம் எங்களை மறுபடியும் ஸ்வய உணர்வுக்குக் கொண்டு வந்தது. 'அதிர்வெடி சப்தம் ஸமீபத்தில் கேட்கிறதே! பெருமாள் மேல வீதிக்கு எழுந்தருளிவிட்டாற்போ லிருக்கிறது. வாரும் போகலாம்' என்றார் நண்பர். சிறிது தூரம் போவதற்குள் பெருமாள் மேல வீதிக்கு எழுந்தருளிவிட்டது தெரிந்தது. ஏனெனில் தூரத்தில் வரும்போது அதிர்வெடி சப்தம் மாத்ரம் கேட்டதுபோக இப்போது மேளவாத்யமும் வேத பாராயண கோஷமும் கேட்க ஆரம்பித்துவிட்டன. நாங்களும் வேகமாக நடந்தோம். மேல வீதியில் கபால புஷ்கரிணியின் கரைமேல் ஓடிக்கொண்டிருந்த திருத்தேரைத் தூரத்திலிருந்து ஸேவித்ததும் உடம்பில் மயிர்க்கூச்சல் எடுத்தது.

தஞ்சாவூர் ஜில்லாவில் மன்னார்கோவில் ஸ்ரீ ராஜமன்னாருடைய திருத்தேர் ப்ரம்ஹாண்டமானது. அதனுடைய அலங்காரங்கள் அபாரமாக இருக்கும். அதை இழுக்க அநேக வடங்கள் போட்டிருப்பார்கள். ஒவ்வொரு வடத்தையும் ஆயிரக்கணக்கான பக்தகோடிகள் இழுப்பார்கள். அவர்களுடைய பக்தி காரணமாகத்தான் தேர் அசைந்து கொடுக்குமாம். 'நான் கைலாஸ பர்வதத்தைப் பேர்த்துவிட்டேன்' என்று பெருமை அடித்துக் கொண்டிருந்த ராவணனுக்குக் குழந்தையாகிய லக்ஷ்மணனைத் தூக்க முடியவில்லை. 'இதென்ன! ஹிமோத்கிரி மந்தர பர்வதம் மஹா மேரு பர்வதம் இவற்றையும் காட்டில் இந்தக் குழந்தை கனமாக இருக்கிறானே' என்று அயர்ந்துபோய்விட்ட ராவணனுக் கெதிரில் பக்தியோடு ஹனுமார் எடுக்க இளைய பெருமாள் மிகவும் லேசமாக ஆகிவிட்டார் அல்லவா? அப்படித்தான் இந்த மன்னனாரின் திருத்தேரும், அநேக லக்ஷம் ஜனங்கள் தலைமேல் கைகளைக் கூப்பி வணங்கி மகிழ அசைந்து அசைந்து நகரும். இந்த ஆச்சர்ய ஸேவையை அநுபவித்தவர்கள் திருக்கண்டியூர் எம்பெருமானுடைய திருத்தேர் உருவத்தில் சிறியது என்று எண்ணுவார்கள்.

திருக்குடந்தை ஆராவமுதனுடைய திருத்தேரும் பெரியதுதான். அந்தப் பெரிய நகரத்தின் விசாலமான திருவீதிகளில் இருபக்கமும் உள்ள வீடுகளையும் தொட்டுக்கொண்டு அந்தத் திருத்தேர் மெதுவாக அசைந்து ஓடும்போது ஸேவிக்கும் ஸேவை ஒரு தெய்விக ஸேவையே. இதனால்தான் வேறொரு திவ்ய தேசத்துக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பைத் திருமங்கைமன்னன் இந்தத் திவ்ய தேசத்துக்கு அளித்துள்ளார். ஆராவமுதாழ்வானுடைய திருத்தேருக்கு ஒரு தனி ப்ரபந்தம் அருளியது ஒரு தனிப்பெரும் சிறப்பல்லவா? இந்த உத்ஸவத்தை ஸேவித்தவர்களுக்கும் திருக்கண்டியூர் எம்பெருமானுடைய ரதம் கொஞ்சம் சிறியதுபோல் தோன்றலாம். ஆனால் திருத்தேருக்குச் சிறப்பை அளிப்பது அதன் உருவம் மாத்திர மல்ல; அதை ஸேவிக்கவரும் ஜனக்கூட்டம் மாத்திரமல்ல. அவற்றுக்கெல்லாம் பின்னால் தொன்றுதொட்டு வழங்கிவரும் ஐதிஹ்யங்களும் உத்ஸவத்தின் சிறப்புக்குக் காரணமாகின்றன.

நாங்கள் ஸேவித்தபோது பெருமாளைச் சூழ்ந்து நின்றவர்கள் அனைவரும் பரமைகாந்திகள். அவர்கள் எழுப்பிய வேதகோஷம் செவிகளில் அமுதத்தைப் பாய்ச்சியது. திருத்தேரின் அலங்காரமும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இந்தக் கூட்டத்தில் வைதிக லக்ஷ்மி தாண்டவ மாடினாள் கூட்டத்துக்குள் பொதுவாகப் புகுந்து பெருமாளை ஸேவித்து மகிழ்ந்தோம். கபால புஷ்கரிணியின் கரைமேல் திருத்தேர்மேல் பெருமாளை ஸேவித்த எனக்கு எத்தனையோ சதுர்யுகங்களுக்கு முன்னால் இதே இடத்தில் இதே எம்பெருமான் பரமசிவனுக்கு ஸேவை யளித்து அநுக்ரஹித்த வைபவங்கள் ஞாபகத்துக்கு வந்தன. அப்போதைக்கும் இப்போதைக்குந்தான் எவ்வளவு வித்தியாஸம்! அப்போது ஸாக்ஷாத் பிரம்மதேவனே வேதபாராயணம் பண்ணித் துதித்தார். இந்திரனை யுள்ளிட்ட தேவர்களின் கூட்டம் பெருமாளைச் சூழ்ந்து நின்று ஸேவித்து மகிழ்ந்தது. தும்புரு நாரதர் என்கிற தெய்வக் கலைஞர்கள் வீணையில் கானம் செய்தார்கள். தேவலோகத்து ரம்பை முதலிய அப்ஸர ஸ்த்ரீகள் நர்த்தனம் பண்ணினார்கள். தம்முடைய சாபம் தீர்ந்தது என்கிற ஸந்தோஷத்தினால் பரமசிவன் ஆனந்தக் கூத்து ஆடிக்கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த உமாதேவி தமது பர்த்தாவின் சாபத்தைப் போக்கிய கருணாமூர்த்தியைக் கண்களால் ஆரப் பருகிப் பக்திக் கண்ணீரைப் பெருகிக்கொண்டிருந்தார். அப்போது யோகிவர்ய அக்ரகண்யரான சங்கர மூர்த்தி ஆரம்பித்து நடத்திவைத்த உத்ஸவந்தான் ப்ரதிவருஷம் அமோகமாக வ்ருத்தியடைந்து இன்றளவும் நடந்துவருகிறது. அடியேனைப் போன்றவர்களையும் பகவானுடைய கருணை வெள்ளத்தில் அவகாஹிக்கச் செய்கிறது. சிவ பெருமானுடைய சாபத்தைப் பகவான் தீர்த்துவைத்தார் என்கிற விஷயத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளும்போது எவ்வளவோ ஸந்தேஹங்களும் அவற்றுக்கு ஸமாதானங்களும் தோன்றத்தான் செய்கின்றன.

"சிவபெருமான் ஸர்வஜ்ஞ ரல்லவா? அவருக்குப் பிரமனுடைய தலையைக் கிள்ளினால் பிரம்மஹத்தி தோஷம் வந்தடையும் என்று தெரியாதா?

தெரிந்திருந்தும் ஏன் கிள்ளினர் ? பிரம்மாவும் பாகவதோத்தமர் அல்லவா ? சிவன் அவருடைய தலையைக் கிள்ளிவிட்டால் கூட உலகத்துப் பாமர மக்களைப் போல அவருக்கு ஆக்ரஹம் உண்டாகிச் சபிக்கலாகுமா?" என்கிற ஸந்தேகங்க ளெல்லாம் உண்டாகின்றன. ப்ருகு மஹர்ஷி அநுக்ரஹித்த திவ்ய ஸூக்தி களை ஸேவித்தபின் சிவபெருமானுடைய ஸாஹஸ காரியமும். அதை யொட்டி யெழுந்த பிரம்மதேவனுடைய சாபமும், பகவானுடைய பரத்வத்தை உலகத்துக் குப் பிரகாசம் செய்ய அவர்கள் மேற்கொண்ட சூழ்ச்சியோ என்று கூடத் தோன்றுகிறது. ஏனெனில்: இந்த விஷயத்தை அடிப்படையாகக் கொண்டு இம்முனிவர் அருளிய திருக்கண்டியூர் ஸ்தலபுராணம் பகவானுடைய பரத்வத் தைப் பற்பல வழிகளில் உணர்த்துகிறது. இந்தப் புராணத்தை ஸேவித்தால் ரஸித்து அநுபவிக்கக்கூடிய அம்சங்கள் அநேகம் உண்டு. அவற்றுள் முக்ய மானது அவகாசங் கண்ட விடங்களி லெல்லாம் சில விடங்களில் குறிப்பாகவும் சில விடங்களில் தெளிவாகவும் மற்றும் சில விடங்களில் த்வநி மூலமாகவும் பகவானுடைய பரத்வத்தை உணர்த்துவது தான்.

"மஹாப்ரளயத்தில் உலகமெல்லாம் ஒரே ஸமுத்ரமயமாக இருந்தது. அப்போது பகவானுக்குக் கருணை உண்டாயிற்று. உலகங்களை யெல்லாம் ஸ்ருஷ்டி செய்யத் திருவுள்ளம்பற்றினர். பிரம்மாண்டமான ஆலிலையின் மேல் ஒரு குழந்தையைப் போல் சயனித்துக்கொண்டு அந்தப் பிரளய ஸமுத் ரத்தின்மேல் மிதந்தார். அப்போது அவருடைய உந்தியில் ஒரு தாமரை பூத் தது. அதில் மகத் தத்வ ரூபனுகிய பிரம்மதேவனை உண்டாக்கினர். பிறகு அஹங்கார தத்வ ரூபனுகிய ருத்ரனையும் மற்றவர்களையும் உண்டாக்கினர்" என்று தொடங்குகிறது புராணம். இப்படித் தொடங்கும்போதே, 'பகவான் தான் உலகங்களை யெல்லாம் உண்டாக்கினர்; அவர்தான் ஜகத் காரணவஸ்து; ஆகையால் அவர்தான் பரதேவதை' என்று குறிப்பாகக் காட்டுவதில் உள்ள அழகை ரஸிக்காமல் இருக்க முடியாது.

பிரமனுக்கு ஐந்து முகங்கள் இருந்தனவாம். அவற்றுள் நடு முகம் மிகவும் அழகாக இருந்ததோடு மூடர்களான ஜடர்கள் என்றும் மஹா ஞானிக ளான ரிஷிகள் என்றும் வித்யாஸ மில்லாமல் எல்லாரையும் வசீகரித்து எல்லா ரையும் மோஹிக்கச் செய்வதாய் இருந்ததாம். அவ்வளவில் கூட அது நிற்க வில்லை. ஸாக்ஷாத் ஸர்வேச்ரனைக் கூடத் தம்முடைய போக விபூதியை மறந்து லீலாவிபூதியிலேயே ஸக்தனுகச் செய்யக்கூடியதாகவும் இருந்ததாம். ஈச்வர னிடம் செல்ல வேண்டிய மனத்தை மயக்கி வேறு விஷயங்களில் செலுத்தும் வஸ்து எதுவாக இருந்தால்தான் என்ன ? அது மோக்ஷத்தை நாடுகிறவர் களுக்கு இடையூறுதானே ! ஆகையால் உலகத்தை மயக்குகிற இந்த அழகிய முகத்தைக கிள்ளிவிட்டால்தான் ஆத்மோஜ்ஜீவநத்தை நாடுகிறவர்களுக்கு க்ஷேமமுண்டு என்று குறிப்பாகக் காட்டுகிருர் மஹர்ஷி. ஆனல் இந்த ஸாஹஸ காரியத்தைச் செய்வது யார் ?

ஸர்வேச்வரனுக்கும் ஜகந்மாதாவுக்கும் பிரமனும் பிள்ளைதான். உலகத்து ஜனங்களும் பிள்ளைகள்தான். ஒரு பிள்ளையினால் உலகத்துக்கே கெடுதல் என்று தோன்றினால் ஜகந்மாதாவும் கருணா ரூபிணியு மாகிய பிராட்டி சும்மா இருக்க முடியுமா ? உலகத்தைக் காப்பாற்றுவதன் பொருட்டுப் பிரமனுக்கு அதிகப்படியாக உள்ள அந்த ஐந்தாவது தலையைக் கிள்ளிவிடுவது தான் நல்லது என்று திருவுள்ளம்பற்றினார். அவருக்கு அந்தரங்கமாக மற்றொரு எண்ணமுந்தான் இருந்தது. ஆத்மோஜ்ஜீவனத்தை நாடும் உலகத்துக்குப் பரதேவதையையும் அந்தத் தேவதையை வசீகரணம் பண்ணும் உபாயத்தையும் நிஷ்கர்ஷித்துக் கொடுப்பதற்கு இது ஒரு வழி யல்லவா ?

பிராட்டியின் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பின்புதான் சங்கரன் பிரமனுடைய ஐந்தாவது தலையைக் கிள்ளினார். இது உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டுத்தான் என்பதும் உண்மையே. ஆயினும் அவர் தம்முடைய கர்மத்தின் பயனை அனுபவிக்கத்தான் வேண்டியதாயிற்று. பிரமன் ஸாமாந்ய தேவதையா சும்மா இருந்துவிட ? தன் தலையைக் கிள்ளிய சிவனை நோக்கிச் சீறினார். பற்களை நறநற வென்று கடித்தார். கர்ஜித்தார். ஹூங்காரம் பண்ணினார். கடைசியில் சபித்தும் விட்டார். "உன்னை ப்ரம்மஹத்தி தோஷம் வந்து அடையட்டும். என்னுடைய கிள்ளப்பட்ட தலை உன் கையிலேயே ஒட்டிக்கொள்ளட்டும். பிரளய காலத்து நெருப்புப்போல் அது உன்னைப் பொசுக்கட்டும். உன் உடல் விகாரமான உருவத்தை அடையட்டும்" என்றார். தன்னை வந்தடைந்த பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக் கொள்ளச சிவபெருமான் படாத பாடெல்லாம் பட்டார். ஆயினும் ஒன்றும் கொஞ்சமும் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது. கடைசியில் பெரியதான ஆபத்து வந்தால் பகவானாகிய ஹரியை நினைக்கவேண்டும் என்கிற வசனம் அவர் ஞாபகத்துக்கு வந்தது. 'பகவான் ப்ரஸந்நமானால் அடைய முடியாதது என்ன இருக்கிறது ? அவர் திருவுள்ளங் கடுத்தால் அடையக்கூடியது என்ன இருக்கிறது? நாம் அவரை ஶரணமாக அடைவோம். அவர் ஶரணாகத வத்ஸலன். நம்மை அவசியம் காப்பாற்றுவார்' என்று தமக்குள் நிச்சயம் பண்ணிக் கொண்டு பகவானுடைய திருவடிகளையே சரணமாக அடைந்தார்.

[தொடரும்]

189252

189252

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ' உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன் '

[ஸ்ரீ. உப. தார்மிகரத்நப்ரதீப N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., B.L., அட்வோகேட், மதுரை.]

' உந்து = தன் வசமாக்கிச் செலுத்தும், மத களிற்றன் = மதங் கொண்ட யானையை உடையவன், ஓடாத = குறையாத, தோள் வலியன் = தோளின் பலத்தை உடையவன் ' என்பது இச்சொற்றொடரின் பதவுரை.

இதன் விசேஷார்த்தங்களைக் கவனிப்போம். ஸாதாரணமான களிற்றைப் பாகன் தன் இச்சைப்படி செலுத்துவன். அது மதங் கொண்டபோது அதன் இச்சைப்படியே போகும். கண்ணனோ வென்னில், முழு மதங் கொண்டு யாருக்கும் அடங்காத தசையிலும், அந்தக் களிறு தன் வசமாகவே செல்லக் காண்பன். இது ஸ்வாபதேசத்தில்,

" வாரி சுருக்கி மதக்களி றைந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ "

என்னும் ஸ்ரீ பொய்கையாழ்வார் அருளிச் செயலை அநுகரிக்கிறது. பாரதந்த்ர்ய ஞானத்தோடு வர்த்திக்கும் ஸாது சேதநன், தன் இந்த்ரியங்கள் சினத்த பொழுதும் பகவத் க்ருபா விசேஷத்தால் தவற்றில் போகாதிருக்கின்றன வென்னும் நினைவுடையவனா யிருப்பன் என்பது ஆண்டாள் நிர்வாஹம். ஐம் பொறிகளையும் ஐந்து யானைகளாகவும், நடுவயதில் பொறிகளில் ஏற்படும் சினத்தால் அதது சேரவேண்டிய விதி விஹிதமான இடத்தை விட்டுத் திரிந்து வேறிடங்களிற் சேர முயல்வன வென்றும், செப்மையான நெறியில் அவை களைச் செலுத்திச் சேரிடத்தே சேரச் செய்யவேண்டு மென்றும் முடிவு.

இந்தச் சினங்கள் ஞானத்தின் பௌஷ்கல்யத்தால் ஆறவேண்டு மென் பதை ஔவை ' ஆறுவது சினம் ' என்று முடிவு கட்டினாள். எந்த இந்த்ரியம் சினத்து அபாத்ரத்திலுள்ள பொருளை விரும்பினாலும், அக்ருத்ய துஷ்க்ருத்யங்களைச் செய்ய முயன்றாலும், ஞானத்தால் அதைச் சமாமடைவித்துத் தன் அறிவினாலும் நன்னெறி நிற்றலாலும் அதைக் கடந்தேறச் செய்ய வேண்டு மென்பதாம். இதையே கம்பர்.

" கற்றனர் ஞானமின்றேல் காமத்தைக் கடக்கலாமோ "

என்கிறார். இங்கே ' ஞானம் ' என்பதற்கு ' சேஷத்வ பாரதந்த்ர்ய ஞானம் ' என்று பொருள் செய்யவேண்டும். இவை இரண்டும் ராவணனுக்குத் தெரியாததலால் உந்து மத களிற்றன் அவனுக்கு உதவவில்லை. அதனால் செந்நெறியில் அவனது இந்த்ரியங்கள் நில்லாமல் அவன் சேரி திரிந்துபட்டான். [சேரி

திரியாமல்—5-ம் வேற்றுமைத் தொகை நீக்கப் பொருள்; சேரியினின்றும். சேரியை விட்டுத் திரியாது என்பது பொருள். சேரி சேருமிடம்; விதிப்படி தான் சென்று சேரவேண்டிய இடம்.] இதைத் திருவள்ளுவர்

> " கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றுணரு மைம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள. "

என்று நல்வழிப்படுத்துவர். ஐம்புலனும் சேருமிடம் தர்ம பத்நி ஒருத்திதான் என்பது அவரது உயரிய கொள்கை. ஒவ்வொரு புருஷனுக்கும் எல்லா ப்ரக்ருதியும் மனைவியே யாதலின், ஐம்பொறிகளும் படிந்துண்ணும் ஐம்புலன்களும் அவளிடத்தில் உள்ளன. அவளே சேரி: (சேருமிடம்); இவளை ஒழித்து எந்த இன்பத்துக்கும் மற்றோரிடத்தில் நோக்குதல் சேரி திரிதல். இவள் அளிக்கும் புலன் படிந்துண்ணும் போகத்தினும் பல்லாயிர மடங்காகக் கண்ணன்பால் இவ்வைம்பொறிகளும் மண்டி அநுபவிக்கத்தக்க ஐம்புலன்களும் மலிந்து கிடக்கின்றன. ஆண்டாள் இவைகளில் மண்டி அநுபவித்து நமக்கு வழி காட்டுகிறாள். காண்பது அவன் திவ்ய மங்கள விக்ரஹம்; கேட்பது அவன் புகழ்; சுவைப்பது அவன் வாயமுதம்; உயிர்ப்பது அவன் மணம்; உறுவது அவன் கைத்தலம்—என்னும் நிலை இள வயதில் வந்தால், நம் பொறிகளாகிய ஐந்து யானைகளுக்கும் எவ்வளவு மதம் பிடித்தாலும், அவைகளைக் கண்ணன் தன் வசமாக்கி நன்னெறியிற் செலுத்துவன் என்கிறாள். அவனிடத்தே புலன்களைக் கொண்டு அநுபவிக்க அமையின், நம் மதக் களிறுகளை அவன் உந்துவன்; அப்போது அவை சேரி திரியா. [ஓடாத தோள் வலியன்—குறையாத தோள்வலி யுடையவன்.] களிற்றுக்கு மதம் ஏறினால் வலியேறும்; மதம் இறங்கினால் வலி இறங்கும். அதுவே பொறிக்கும். கண்ணன் வலி முற்றப் பெற்றதாதலால் எக் காலத்திலும் குறையாதது. எவ்வளவு சினத்த மதக்களிற்றையும் கண்ணன் தன் வசமாக்கிச் செலுத்துவன். அது போன வழி சிறிதும் விடவேண்டிய அவச்யம் இவன் செலுத்துதலுக் கில்லை யென்னும் ஹேது தோன்றச் செய்கிறாள் ஆண்டாள். நாமும் அநவரதம் கண்ணன் திருவடிகளையே த்யானித்துக்கொண்டு நம் ஆசார்யர்கள் வகுத்த செந்நெறியில் நின்று அவனருளால் சேரி திரியாமல் வர்த்திக்க ஶரண்யன் க்ருபை செய்வானாக.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீமஂகொவ ராஜா ந—ஜய தீ ரு மஹாஜெஶிகாய நமஃ

# நற்போது போக்கு

[ஸ்ரீ ராம ஸுக்ரீவர்களின் பரிவு]

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் கங்கைக் கரையில் குகப் பெருமானிடத்தும், பம்பைக் கரையில் ஸுக்ரீவ மஹாராஜரிடத்தும, கடற் கரையில் விபீஷணாழ்வானிடத்தும் தமது ஸௌஶீல்ய பாவம் தோன்ற நட்புக் கொண்டாரென்பதும்,

"குகனொடு மைவ ரானே முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானே மெம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய நின்னொடு மெழுவ ரானேம்
புகலருங் கானந் தந்து புதல்வராற் பொலிந்தா னுந்தை"

என்றபடி அவர்களைத் தமது ஸஹோதரராகவே பாவித்து நடத்தி வந்தாரென்பதும் ஸ்ரீ ராமாயணத்தில் ஸுப்ரஸித்தம். இவர்களுள், அக்நி ஸாக்ஷிகமாக நட்புக் கொண்ட ஸுக்ரீவ மஹாராஜரிடம் ராகவன் காட்டின அன்பையும், அதற்கு ஸுக்ரீவன் மிகுந்த பரிவுடன் கூறின மொழிகளையும் குறிப்பிடுவோம்.

ஸ்ரீ ராமபிரான் ராவண வதம் செய்யும் பொருட்டு வாநர ஸேனையை உடன் கொண்டு கடல் கடந்து இலங்கை சேர்ந்து, ராவண நகர்க்கு அருகிலுள்ள ஸுவேல பர்வதத்தை அடைந்தார். அங்கு ஓரிரவு தங்கி, மறுநாள் காலையில் ஸுக்ரீவ மஹாராஜருடன் லங்கா பட்டணத்தின் ஸந்நிவேசத்தையும் ஸ்வரூபத்தையும் கண்டறியும் பொருட்டு லக்ஷ்மணனையும் உடன்கொண்டு அம்மலையின் அத்யுந்நதமான சிகரத்தில் ஏறினர். அப்போது, ஆகாயத்தை அளாவியதோர் கோபுரத்திலேறி ராமனுடைய ஸைந்யத்தின் ஸ்வரூபத்தைப் பார்க்கும் பொருட்டு, ராமன் முகமாய்த் திரும்பி நின்றுகொண்டிருந்த ராவணனைப் பார்த்து ஸுக்ரீவன், ஸ்ரீராமனிடமிருக்கும் நிரதிசய ப்ரீதியினால் ராவணனிடம் அடங்காக் கோபங்கொண்டு திடீரென்று மலையுச்சியினின்றும் கிளம்பி ராவணன் முன் குதித்து, "ஏ ராவணா! நான் ஸ்ரீ ராகவனுடைய தாஸன்; உன்னுடைய ராஜ்ய லக்ஷ்மியை உன்னிடமிருந்து இதோ பறித்து விடுறேன்; என் ஆற்றலைப் பார்" என்று வீராட்டஹாஸத்துடனே ராவணனொடு பொருது, அவனுடைய கிரீடங்களைக் கீழே தள்ளி அவனுடன் வெகு நேரம் முஷ்டி யுத்தம் செய்தான். பிறகு ராவணன் மாயையாய்ப் போர் புரியத் தொடங்கவே, 'இனி இங்கிருத்தல் தகாது' என்றெண்ணி உடனே கிளம்பி ஸ்ரீ ராம ஸந்நிதானம் வந்து சேர்ந்தான். ஸுக்ரீவனுடைய பிரிவை ஸஹிக்காத ரகுபுங்கவன், அவனுடைய ஸாஹஸச் செயலுக் கிரங்கி, "அப்பா ஸுக்ரீவா! என்ன கார்யம் செய்தனை! அரசராயினோர் இத்தகைய துணிவான செயலை முன் யோசனையின்றிச் செய்வார்களா? என்னை இந்நிலையில் கொண்டு வந்துசேர்த்து இத்தகைய ஸாஹஸமான கார்யத்தைச் செய்ய உன் மனம் எப்படித் துணிந்தது? ஸுக்ரீவா! உன்னை அந்த ராவணன் கொன்றிருப்பானேயாகில், அவன் செய்த குற்றத்தைப் பாராட்டி நான் அவனை அழித்து வென்றேனென்றாலும், உயிர் இறவாத நான் தோற்றவனே யாவன் அன்றோ? ஒருத்தரும் போரில் இறவாமல் எல்லாரோடும் நான் மீண்டு என் நகர்க்குச் சென்றாலும் உன்னைப் பிரிந்த துயர் எனக்குப் போகுமா? நீ எனக்குச் செய்த உதவிகள் எவ்வளவு? உயிர் நீங்குவதாயிருந்த காலத்தில் ஸீதையின் அணி முடிப்பைக் காட்டி என் உயிரைத் தந்தாய். இலங்கைக்குத் தூதனுப்பிச் செய்தி தெரிந்துகொண்டாய். ஸேது கட்டிக் கடலைத் தாண்டுவித்தாய். இவ்வளவு உதவி செய்தாயே! என் திறத்தில்

இத்தகைய அளவற்ற உதவிசெய்த உனக்குத் தீங்கு நேரிட்டால் ஸீதையால் தான் எனக்கு என்ன ப்ரயோஜநம்? என் தம்பிமார்களும் நானும் இருந்துதான் என்ன ப்ரயோஜநம் ? உன் பராக்ரமம் யான் அறிந்ததே. நீ திரும்பி வாராம லிருந்தால், நான் ராவண வதம் செய்து விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி, ப்ரதனையும் ராஜ்யத்தில் ஏற்படுத்திவிட்டு, இந்த ஶரீரத்தை விட்டுவிடு கிறதென்று நிச்சயம் பண்ணி யிருந்தேன். ஸுகமாக வந்தனையே ! ஸந்தோஷம் ” என்று தம்முடைய ஸ்வாபாவிகமான ஆச்ரித வாத்ஸல்யம் ததும்பக் கூறினார்.

அது கேட்டு ஸுக்ரீவன் மனம் நெகிழ்ந்து, “ ஸ்வாமி ! நான் ராஜ்யம் முதலிய செல்வங்களைத் தேவரீர் திருவருளால் அடைந்தும், அந்நன்றியைக் கிஞ் சித்தும் கருதாமல் காமபரவஶனாய்த் தேவரீரைக் கவனியாமலிருந்த மஹா பாபி. என் விஷயத்தில், ஸர்வோத்க்ருஷ்டனான தேவரீர் கேவலம் வாத்ஸல் யத்தால் இம்மாதிரி சொல்வது தகுமே ?” என்று பெருமாள் தனக்குச் செய்திருக்கும் மஹோபகாரத்தை நினைந்து, அதற்குத் தன்னால் ப்ரதி செய்ய முடியவில்லையே என்ற மஹா அநுஶயத்துடன்

“ 𑌤𑌵 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌪𑌹𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑌾𑌵𑌣𑌮𑌗𑍍𑌰𑌤𑌃 ।
𑌮𑌰𑍍𑌷𑌯𑌾𑌮𑌿 𑌕𑌥𑌂 𑌵𑌀𑌰 𑌜𑌾𑌨𑌨𑍍 𑌪𑍌𑌰𑍁𑌷𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

[ஹே ராமா ! உம்முடைய பார்யையை அபஹரித்த ராவணனை என் கண்ணால் நேராகப் பார்த்தும் என் பௌருஷத்தை அறிந்த தாஸனாகிய அடியேன் எப் படி ஸஹிப்பேன் ? என்று] வ்யங்க்யமாய்க் கூறுகிறான். வால்மீகி பகவான் இந்த ச்லோக முகத்தால் அருளிச்செய்ததைக் கம்பர்,

“ காட்டிலே கழுகின் வேந்தன் செய்தன காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்
கேட்டிலே னல்லே னின்று கண்டுமக் கிளியன் றனை
மீட்டிலேன் தலைகள் பத்தும் கொணர்ந்திலேன் வெறுங்கை வந்தேன்”

என்கிறார். [ஹே ராமா ! அசேதநனான என்னைப் பார்த்து இத்தகைய பெரிய வார்த்தைகளைச் சொல்லலாமா ? அடியேன் அதற்குத் தகுந்த பாத்ரனா ? கேவலம் காட்டில் பிறந்து வளர்ந்து நிர்வ்யாஜ ராய் யாதொரு பயனையும் கருதாமல் ஸீதையை ராவணனிடமிருந்து மீட்கப் பெரும் போர் புரிந்து தம் உயிரைப் பறிகொடுத்த ஜடாயுவைப்போல் தேவரீர்க்கு நான் ஏதேனும் செய்தேனா? ‘ நீ என்னுடைய தோழன் ’ என்று சொன்ன (ஒரு சிறிய) சொல்லைப் பெருஞ் சொல்லாகக் கொண்டு, ‘ ஸ்வாமி இவ்விடமே எழுந்தருளி யிருக்க வேண்டும்; வநம் செல்ல வேண்டாம்; அடியேன் தேவரீர்க்கு ஸகலவித கைங்கர்யமும் செய்கின்றேன் ’ என்று இன்மொழி கூறி இளைய பெருமாளோடொப்பக் கைங்கர்யங்களைச் செய்துவந்த குஹப் பெருமான் பரிவுதான் எனக்குண்டா ? இப்படி இவர்கள் செய்தி யறிந்தும் சிறிதும் மனமுருகி வருந்தாமல் கேவலம் சரீர ஸுகத்தையே கருதுகின்றேனே ! ராவணனோடு போர் புரிந்து அவனைக்

கொன்று, தேவரீருடைய ப்ரிய பார்யையைத் தேவரீரிடம் ஸமர்ப்பித்தேனா? அது இல்லையாயின் அந்தப் பாபியான ராவணனுடைய தலைகள் பத்தையும் ஒரு கொத்தென அறுத்துத் தேவரீருடைய திருவடிகளில் சேர்த்தேனோ? தேவரீர் அடியேற்குச் செய்திருக்கும் உபகாரத்திற்கு அடியேன் ஒரு கார்யமும் செய்யவில்லையே? தேவரீர் என் பகைவனை வாலியை ஒழித்து என்னை இனிது வாழும்படி செய்ததோடு, ராஜ்யத்தையும் மீட்டுக் கொடுத்தீர். அங்ஙனம் பேருதவி புரிந்த தேவரீர்க்கு உம் பகைவனை ஒழித்துச் சீதையை மீட்டுக் கொடுத்தாலல்லவா நான் அதற்கேற்ற கைம்மாறு செய்தவனாவேன்! அப்படிச் செய்ய இயலாவிட்டால் என் உயிரையாவது கொடுத்திருக்க வேண்டும். ஒன்றும் செய்யாமல் மஹா நீசனாக வெறுங்கையோடே வந்து நிற்கிறேனே!" என்று மனமுருகிப் பதில் கூறினான். இது வன்றோ மெய்ந் நட்பு!

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு."

கொ. ஸுதர்சநசார்யர்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஆலய ப்ரவேசம்

[ஸ்ரீ. உப. C. நரஸிம்ஹாசார்யர், அட்வோகேட், சென்னை]

1. தென்னிந்தியாவில் உள்ள ஸ்ரீ விஷ்ணு தேவாலயங்கள் கேவலம் ஆகம சாஸ்த்ரங்களுக்கு மட்டும் கட்டுப்பட்டதல்ல. அவைகளில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களின் மஹாத்ம்யம் ஆகம ப்ரதிஷ்டையால் மாத்ரம் உண்டானதல்ல. ஆகம சாஸ்த்ரங்களில் சொல்லாத தமிழ் ப்ரபந்தங்களை வேத மந்த்ரங்களோடு சேர்த்துப் பூஜை செய்கிறோம். ஒவ்வொரு ஆஸநத்து மந்த்ரங்களோடும் வேதம் புராணம் இதிஹாஸ ச்லோகங்களோடு ப்ரபந்த பாசுரங்களைச் சேர்ந்தே அநுஸந்திக்கிறோம். பூஜாங்கமாக ப்ரபந்த சாத்துமறைகளும் பண்ணுகிறோம். ஆழ்வார்கள் ஆசாரியர்கள் விக்ரஹங்களை ஸந்நிதிகளில் எழுந்தருளப்பண்ணி 'உன்னோடும் ஒக்க வழிபட அருளினாய் போலும்' என்கிறபடி பூஜித்து வருகிறோம். ஆகையால் கேவலம் ஆகமங்களோடு நாம் நிற்பதில்லை.

2. அன்றியும், ஆகம சாஸ்த்ரப்படி ப்ரதிஷ்டையான கோவில்களில் நாம் உடனே போய் ஸேவித்து தீர்த்த ப்ரஸாத ஸ்வீகாரம் பண்ணுவதில்லை. ஜீயாள் ஆசார்ய புருஷர்கள் முதலான மஹநீயர்கள் வந்து மங்களாசாஸநம் பண்ணித் தீர்த்த பரிக்ரஹம் பண்ணின பிறகுதான் நாம் போய் ஸேவித்துக் கைங்கர்யங்கள் செய்கிறோம். ஸாக்ஷாத்தாய்ப் பகவானாலே அருளிச்செய்த கீதைக்கு சிஷ்டபரிக்ரஹத்தாலே ஏற்றம் உண்டாகும் என்பது நம் கொள்கை.

"பகவன் ஞானவிதி பணிவகை என்று இவர்
அங்கீகாரத்தாலே அதற்கு உத்கர்ஷம்"

என்று நம்மாழ்வார் திருவாய்மொழி 1, 5, 10 பத்துக்களில் ஸ்ரீ கீதையை அங்கீகரித்திருக்கிறார். இன்றைக்கும் மஹான்கள் ஸந்நிதிக்கு வந்தால் 'எழுந்தருளி மங்களாஶாஸநம் பண்ணவேணும்' என்று ப்ரார்த்திக்கிறோம். இந்த மங்களாஶாஸநம் இன்னதென்று யோசித்தால் அது அந்த மஹான்கள் அந்த பிம்பத்தில் பகவான் நித்யவாஸம் பண்ணவேணும் என்று ப்ரார்த்தநா ரூபமான ஆசிஸ் என்றே சொல்லலாம். அந்தந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி அந்தந்த பிம்பத்தில் பகவான் நித்யவாஸம் பண்ணுகிறார் என்பது நம் கொள்கை. அந்த பிம்பமும் திவ்யமங்கள விக்ரஹமாகிறது. அந்த ஸ்தலம் திவ்ய தேசமாகிறது.

3. ஆகவே மங்களாஶாஸநத்தின் பெருமை இன்னதென்று நாம் அறிய வேண்டும். அறிந்தால் 'யாரே பிரிபவர் தாம்' என்கிற அவா தோன்றும். பகவத் ப்ரஸாதத்தாலே 'அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து' என்று மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பண்ணின பிறகு அந்தத் திவ்ய மங்கள விக்ரஹங்களுக்கு ஒரு தனிப் பெரும் பெருமை உண்டு.

4. ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பண்ணின கோவில்கள் ஆகம சாஸ்த்ரப்படி ப்ரதிஷ்டை பண்ணப்பட்ட கோவில்களா அல்லவா என்று நாம் அறிய முடியாது. ஸ்வயம் வ்யக்தமான ஸ்தலங்களையும் மங்களாஶாஸநம் பண்ணினார்கள். அந்த மங்களாஶாஸநத்துக்கு எம்பெருமான்கள் ஸந்நிதிகளை விட்டு வந்து ஆழ்வார்களுக்கு ஸேவை ஸாதித்தார்கள். ஆழ்வார்கள் காலத்துக்குப் பிறகும் திருக்குறுங்குடிநம்பி எம்பெருமானாரிடத்தில் வேதாந்த காலக்ஷேபம் கேட்டு 'வைஷ்ணவ வாமநன்' என்று பேர் பெற்றாராம். அதன்பின்னே அப்பெருமானுக்கு 'நிறைந்த நீலமேனியின் ருசிஜநக விபவ லாவண்யம்' உண்டாயிற்று என்பர்கள். மேலும்:

5. ஸந்நிதிகளில் செய்யும் வேத ப்ரபந்த பாராயணத்துக்கு தர்மத் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தங்களுக்கு மேலான பலன் உண்டு. இந்த ப்ரபந்தம் பாடின இடம் எல்லாம் பரிசுத்தமாகும். ஆகவே இதை ஸ்பர்ஶவேதி என்று நிர்வஹித்திருக்கிறார்கள். தொட்ட இடம் எல்லாம் சுத்தமாக்கும் திறமை யுடையது என்பர்கள். 'பாட்டாய பல பாடிப் பழவினைகள் பற்றறுத்து' என்று நம்மாழ்வார் ஸாதித்தபடி பூர்வ ஜந்ம பாபங்களும் போகும். இவர் 'வினையறக் குடித்த வேப்பங்குடிநீர் இதுகாணும்' என்பர்கள்.

6. இந்த ப்ரபந்த பாராயணம் பண்ணுமவர்கள் ப்ரேமத்தைப் பார்த்தால் அது சாஸ்த்ர வரம்புக்குக் கட்டுப்படாது.

"சாஸ்த்ரங்கள் ஆகாது என்று நிஷேதித்தவற்றை
அநுஷ்டித்து அவற்றில் நின்றும் மீள மாட்டாதே போந்தேன்"

"அந்ய நிஷேத பூர்வகமான ஸ்வரூப ஞானம் பிறந்தால், புறப்பட ப்ராப்தி இல்லை. ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம் பண்ணினால் போய்ப் புக்கல்லது நிற்கவொண்ணாது"

7. மேலே சொன்னவை அதிகாரி ஸாபேக்ஷமாய் நிற்கும். நாம் அந்த அதிகாரிகள் அல்ல. ஆகவே தர்ம சாஸ்த்ரத்துக்குக் கட்டுப்படவேண்டியது ந்யாயம். ஆனால் திடீரென்று ஒரு சட்டம் ராஜாவின் ஆஜ்ஞையில் வந்து விட்டது. தடுக்க முயன்றும் பலன் இல்லை. 'பட்டத்துக்குரிய ஆணையும் அரசும் செய்யுமவை ஆராயாது' வேறு வழியில்லை. அடியோடு கோவில்களையும் பாராயணங்களையும் துறப்பது சரியல்ல. நாம் கேவலம் சாஸ்த்ரஜ்ஞர்கள் அல்ல; ஸாராஜ்ஞர்கள் அல்ல. ஸாராஜ்ஞரான ப்ரபந்நாதாரிகள் என்று நினைத்துக்கொண்டு 'ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பண்ணின திவ்ய மங்கள விக்ரஹங்களுக்கு தோஷம் இல்லை; அப்படி இருந்தாலும் அது பாராயணத்தால் பரிசுத்தமாகும்' என்று எண்ணி, எல்லாரும் முன்போல கைங்கரியம் பண்ண வேண்டும் என்று அடியேன் ப்ரார்த்திக்கிறேன். தேஹ யாத்ரையை உத்தேசித்து அர்ச்சகர்கள் பரிசாரகர்கள் முதலானோர் துறக்கமுடியாது. ஸ்ரீரங்க நாராயண ஜீயர் திருப்பதி ஜீயர்கள் முதலிய அநேக மஹான்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். லௌகிக பாதகங்கள் பல உள. என் செய்யலாம்!

"வெள்ளம் தடுத்தல் அரிதோ தடங்கரைதான்
பேர்த்து விடுத்தல் அரிதோ விளம்பு"

---

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஜந்மாதி லக்ஷண விவேசநம்

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத கலாசாலை திருவையாறு)

உபநிஷத்துக்களில் ப்ரஹ்ம லக்ஷணமானது இரண்டு ப்ரகாரமாயுள்ளது. "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" என்றாப்போல் விபூதி காரணத்வத்தைக் கொண்டு ஒன்று. "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" இத்யாதியாகக் குணங்களை யிட்டு மற்றொன்று. ஸூத்ரகாரரோவெனில் "ஜந்மாத்யஸ்ய யத:" என்று முதல் ப்ரகாரத்தையே ப்ரஹ்ம லக்ஷணமாகக் கொண்டார். ஸத்யத்வாதி குணங்களையிட்டு லக்ஷணம் அருளவில்லை. இதற்கு ச்ருதப்ரகாசிகையில் அருளிய ஸமாதாந மென்னவென்றால்—

'விபூதியை லக்ஷண மாக்கினால் அதற்கு உபயுக்தமாய்க் குணங்கள் ஆக்ஷிப்தங்களாய் அர்த்தாத் ஸித்தங்களாகக் கூடும். ஆகவே குணங்களும் விபூதியும் ப்ரஹ்மத்தைப் போலவே விசார்யங்கள் உபாஸ்யங்கள் என்று எற்

படும். குணங்கள் லக்ஷணமாகிலோவென்னில் விபூதி விசிஷ்டத்வமானது ஆர்த்திகமாகவும் ஸித்திக்க வழியில்லை. விபூதிக்கு ஜிஜ்ஞாஸ்யத்வம் ஏற்பட மாட்டாது' என்று ஆசங்கையைப் பரிஹாரம் செய்வதற்காக ஜந்மாதி காரணத்வத்தை லக்ஷணமாகக் கொண்டார் ஸூத்ரகாரர் என்னும் கருத்துள்ள ஸூக்திகளே. இந்த லக்ஷணத்தினால் உபாதாந காரணத்வமாத்ரம் ஏற்பட்டாலும் நிமித்த காரணத்வம் ஸித்திக்கமாட்டாதே என்பதாக ஒரு ஸந்தேஹத்தை ஆவணி மாஸத்து ஸஞ்சிகையில் நம் ஸம்பாதகஸ்வாமி வெளியிட்டருளினர். அடியிற்கண்ட ஸமாதாநத்தை அடியேன் விஜ்ஞாபநம் பண்ணிக் கொண்ணிக் கொண்டேன்.

1. ஸூத்ரத்திலும், ச்ருதியிலுமுள்ள 'யதঃ' என்கிற பதமானது ஹேதுமாத்ரபரம். உபாதாந காரணமாத்ரம் அதன் பொருளன்று. 'யதோவா' என்கிற ச்ருதியானது ஸத்வித்யா வாக்யத்தில் ப்ரதிபந்நமான உபய வித காரணத்வத்தை அநுவாதம் செய்கிறது. ஆகவே உபாதாநகாரணத்வ மாத்ரம் இதில் விவக்ஷித மென்று கொள்ள முடியாது என்று

"ஈநாவாதி நிமக்ஷணவாகெூய த உதிவஊ-ஹயவிஷயழ
வஸ்தும் அயதஊ திவஊ-ஹயஷயஜெவ"

என்று ச்ருதப்ரகாசிகையையும் அவ்வர்த்தத்திற்கு அநுகுணமாக, "யதঃ...... ஸூஸஜ்ஞாகூ ஸவஜ்ஞாகூ, ஸவ ஶக்தேঃ" என்பதாக ஸ்ரீ பாஷ்யகாரர் அருளியதையும் உதாஹரித்துத் தநுபந்தியான மற்றும் சில ஸந்தேஹங்களுக்கும் புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையில் ஸமாதாநம் விஜ்ஞாபித்தேன்.

2. இதற்குமேல் மற்றொரு ஸந்தேஹத்தை நம் ஸ்வாமி சென்ற ஸஞ்சிகையின் மூலம் உத்தாபநம் செய்தருளியிருக்கிறார். "விபூதியினால் குணங்களுக்கு அந்தர்பாவம் ஏற்படுவதுபோல், குணங்களைக் கொண்டு லக்ஷணம் சொன்னாலும் 'ஸர்வ' சப்தத்தில் அகப்பட்டிருக்கும் விபூதிக்கும் அந்தர்பாவம் ஏற்படுமென்று ஏன் நிர்வஹிக்கக் கூடாது"? என்று "ஜ்ஞாநவஃ. நிதூாவ ஸஜ்ஹிது ஜ்ஞாநெ காகாஙஃாஹ" என்று இவ்வதிகரணத்திலே ஸ்ரீ பாஷ்யம் ஸர்வ விஷயகஜ்ஞாந மென்பதாக இதனால் ஏற்படுகிறது. 'ஸர்வ' ஶப்தத்தினால் விபூதி எல்லாம் விவக்ஷிதமாகின்றதே என்பதாக ஸ்வாமியின் திருவுள்ளம்.

இந்த ஆசங்கைக்கு ப்ரஹ்ம லக்ஷண வாதத்தில் அநந்தாசார்யர் ஒருவிதமாக ஸமாதாந மருளியிருக்கிறார். அஸங்கோசமாவது, ஸர்வ விஷயகத்வரூப மன்று; வேறுவிதம். ஆகவே 'ஸர்வ' பதார்த்தமும் ஜ்ஞாந சப்தத்தினால் விவக்ஷித மாகாது என்பதாக அவர் நிர்வாஹம். தர்க்க ரீதியில் அவர் பரிஷ்காரம் செய்திருப்பதால் அதை இங்கு அடியேன் உதாஹரிக்கவில்லை "அநந்த" சப்தார்த்தமான வஸ்து பரிச்சேத ராஹித்யமும் ஸர்வவஸ்து ஸாமாநாதிகரண்யாரஹத்வ ரூப மன்று நிரதிசய குணத்வ ரூபமே அது. ஆகவே 'ஈநஞ' சப்தார்த்தமாக ஸர்வ வஸ்துக்களுக்கும் அந்தர் பாவ மில்லை என்றும் அவர் நிர்வாஹம்

செய்திருக்கிறுர். நம் ஸம்பாதக ஸ்வாமியின் ஆசங்கையை அநந்தாசார்ய ஸ்வாமியே உத்தாபநம் பண்ணி ஸமாதாநித் திருப்பதால் அபூர்வமான ஸமாதாநத்துக்கு அபேக்ஷித மில்லை.

3. நிற்க: ஜ்ஞாநாநந்த சப்தங்களில் ஸர்வ பதார்த்தமும் உபஸ்திதமென்று கொண்டாலும் பாதக மொன்று மில்லை. காரண வாக்யத்தினல் ஜகஜ் ஜந்மாதி காரண மென்று ப்ரீதி ஏற்பட்ட பிறகு காரணத்வ மூலகமான தோஷத்தை விலக்குவதற்காக "ஸத்யம் ஜ்ஞாநம்" இத்யாதியாக சோதகவாக்யம் ப்ரவர்த்திக்கின்றது. "காரணவாக்யேந ப்ரதிபந்நஸ்ய ஜகஜ்ஜந்மாதிகாரணஸ்ய ப்ரஹ்மண: ஸகலேதரவ்யாவ்ருத்தம் ஸ்வரூபமபிதீயதே ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்மேதி' என்று இங்கு ஸ்ரீ பாஷ்ய ஜந்மாதி லக்ஷண வாக்யத்தை முன்னிட்டுக் கொண்டு சோதக வாக்யம் ப்ரவர்த்திக்கின்றது. ஜந்மாதி லக்ஷண வாக்யமானது சோதக வாக்ய பூர்வக மன்று என்பதாக ச்ருதப்ரகாசிகை. ஆகவே உபஜீவ்யமான ஜந்மாதி காரணத்வத்தை சாப்தமாக்கி உபஜீவகமான சோதக வாக்யார்த்தங்களான குணங்களை ஆர்த்த லக்ஷணமாகக் கொள்வது உசிதமாகிறது. ஜந்மாதி ஸூத்ரத்தினல் சாப்தமாக காரணத்வம்போல், ஆர்த்திகமாக ஸத்யத்லாதிகளும் லக்ஷணங்களாக விவக்ஷிதங்களே. காரணத்வ சங்கிதமான தோஷங்களுக்கு நிவர்த்தகமாகை சோதக வாக்யார்த்தமானது காரணத்வலக்ஷண சேஷமாகிறது. இதுவும் ஸூத்ரகாரருக்கு அபிப்ரேதம்தான் என்று இங்கு ச்ருதப்ரகாசிகை. ஆகவே சேஷி பூதமான காரணத்வத்தை சாப்தமாகவும். அதற்கு சேஷபூதமான ஸத்யஜ்ஞாநாதி குணவத்தையை ஆர்த்தமாகவும் கொண்டது உபபந்நமாகிறது. ஸத்யத்வாதி லக்ஷணத்தை ஸூத்ரகாரர் ஆர்த்த மாக்கினுரே யன்றி அதை உபேக்ஷிக்கவில்லை. ஜந்மாதி காரணத்வத்தில் விசேஷணமா? உபலக்ஷணமா? என்கிற பூர்வபக்ஷமும், இரண்டும் ஸம்மதமே என்று ஸமாதாநமும் ஸத்யத்வாதி குணங்களிலும் ப்ரக்ருத ஸூத்ரார்த்தமாகக் கொள்ளவேண்டியவையே.

4. மேலும் தத்வஹித புருஷார்த்தங்களை ஐய மறத் தெளிவிக்க வந்தது சாரீரகசாஸ்த்ரம். முதல் இரண்டு அத்யாயங்களினல் தத்வமும், மூன்ருவது அத்யாயத்தினல் ஹிதமும், நான்காவது அத்யாயத்தினல் புருஷார்த்தமும் நிர்ணீதமா யுள்ளது. "காரணந்து த்யேய:' என்று ச்ருதியது ஜகத்காரண மோ அதையே உபாஸநம் செய்ய விதித்தது. காரணத்வத்தை லக்ஷணமாகக் கொண்டால் மேலே (3)த்தினல் ஸாதநாத்யாய காரண வஸ்துவைப்பற்றிய த்யாநத்தை ஸபரிகரமாக நிரூபணம் செய்தல் கூடும் என்றும் ஸூத்ரகாரருக்கு விலக்ஷித மென்று மென்று கொள்ளலாம்.

5. அதுவுமன்றிக்கே, சாரீரக சாஸ்த்ரதில் முதல் இரண்டு அத்யாயங்களும் ஜகத்காரணத்வ லக்ஷணத்தை அடியொற்றி ப்ரவர்திக்கின்றன. முதல் அத்யாயம் முதல் பாதத்தில் காரணத்வ லக்ஷணத்திற்கு ச்ருதி விப்ரபத்தி மூலக

மான அஸம்பவ ஶங்கா பரிஹாரமும், மேல் மூன்று பாதங்களில் அதிவ்யாப்தி பரிஹாரமுமாக முதல் அத்யாயம் தலைக்கட்டுகிறது. இரண்டாவது அத்யாயம் முதல் இரண்டு பாதங்களில் வாதி விப்ரதிபத்தி முலகமாய் காரணத்வ லக்ஷணத்திற்கு ஶங்கிதங்களான அஸம்பவாதி வ்யாப்தி தோஷங்களைப் பரிஹரிக்கிறார். மேல் இரண்டு பாதங்களில் ஆகாஶம் முதலிய கார்ய வஸ்துக்களின் கார்யத்வத்தை ஸமர்த்தநம் செய்கிறார். ஆக: இரண்டு அத்யாயங்களிலுமாக ஜகத் காரணத்வ லக்ஷணத்தை ஸமர்த்தநம் செய்கிறதாயிற்று. ஸத்யத்வாதிகளை லக்ஷணமாகக் கொண்டால் இரண்டு அத்யாயங்களின் நோக்கமும் வீணாய் விடும். உபோத்காதாதிகரணங்கள் நான்குக்குப் பிறகு ஸாதநாத்யாயம் பலாத்யாயம் இவையே பர்யாப்தங்களாகுமே. ப்ரக்ருதி பரமாணுக்கள் போன்ற அசித்துக்களுக்கும் ஆதித்ய ப்ரஜாபதி பசுபதிபோன்ற ஜீவர்களுக்கும் அவ்வோ மதஸ்தர் இசைவதற்கு அநுகுணமாகத் தோன்றும் வேதாந்த வாக்யங்களை விஷயமாக்கிப் பரமசேதநனாகிய நாராயண னொருவனே ஜகத்காரணபூதன் "காரணந்து த்யேய:" "த்யேயோ நாராயண: ஸதா" என்று அவனையே த்யானம் செய்ய விதிக்கின்றன என்பது சாரீரக ஹ்ருதயமாகும். காரணத்வ லக்ஷணத்தைக் கொண்டாலன்றி மற்ற காரணவாதி மதநிராஸமும் ஸ்வாபிமத காரண வ்யவஸ்தாபநமும் ஸுகரமன்று.

6. ஸத்யத்வாதி லக்ஷணத்திற்கு ஸங்கதியும் ஸ்வரஸமாகாது. சாரீரக சாஸ்த்ரத்தில் ப்ரதமத் விகமாகிய முதல் இரண்டு அத்யாயங்களும் முன் கூறியபடி காரணத்வ லக்ஷணத்தை ஸமர்த்தநம் செய்பவை. ஆகவே ப்ரதமத்விகத்தில் காரண விஷயமான ஜந்மாதி லக்ஷணத்திற்கு ஸங்கதியுண்டு. காரணவிஷய வாக்ய விசார ரூபமானது முதல் அத்யாயம். ஆதலால் அத்யாயத்தில் ஸங்கதியுமுண்டு. ஸத்யத்வாதி குண லக்ஷணத்திற்கு த்விக ஸங்கதியும் அத்யாய ஸங்கதியு மில்லை. இந்த லக்ஷணத்தை ஆர்த்திகமாகக் கொண்டால் இதற்கு ஶங்கதி தனியாக அபேக்ஷிதை யன்று. காரணத்வ லக்ஷண சேஷமாய் இந்த லக்ஷணம் சேரலா மன்றோ? அந்தராதிகரணமானது ஆநந்தமயாதிகரண சேஷமாய் அவதரித்திருப்பதை இங்கு நினைக்கவேண்டும்.

7. இந்த்ர ப்ராணாதிகரணத்தில் இந்த்ர சப்தத்திற்கும் ப்ராண சப்தத்திற்கும் வாச்யனைப் பற்றிய ஸந்தேஹமும் ஸமாதாநமு முள்ளது. ஸூத்ரத்திலோ "ப்ராணஸ்ததாநுகமாத்" என்றார். இந்த்ர சப்த வாச்யனுக்கு இங்கு விசாரம் ஆர்த்திக மென்றும் ப்ராண சப்த வாச்யனுக்கு விசாரம் சாப்தமென்றும் இங்கு ச்ருதப்ரகாசிகை. ஸித்தாந்த ஹேதுவானது ப்ராண சப்த கடித வாக்யத்திலே யுள்ளது. ஆதலால் இப்படி ஸூத்ரம் செய்தருளினர் என்றும் சொல்லப் பட்டது. அதுபோலவே காரணத்வ லக்ஷணத்தில் முன் காட்டிய ப்ரயோஜநங்களைக் கொண்டு அதையே சாப்த மாக்கியது என்றும், குண லக்ஷணத்தை ஆர்த்த மாக்கிய தென்றும் கொள்வது உபபந்நமாகும்.

8. உதாஹ்ருதமான இந்த்ர ப்ராணாதிகரணத்திலே "ஜீவமுக்ய ப்ராணலிங்காந்நேதி சேந்ந" என்கிற ஸூத்ரத்திலே ப்ரஹ்மத்தை அநுஸந்திக்கும் பொழுது விபூதி விசிஷ்டமாகவே அநுஸந்திக்கவேண்டு மென்னும் நிர்ப்பந்த

மில்லை என்று தெரிகிறதே. ஆதலால் விபூதிக்கு உபாஸ்யாந்தர்ப் பாவ மில்லாமற் போய்விடும் என்கிற காரணத்தினுல் காரணத்வத்தை லக்ஷண மாக்கியது என்று ச்ருதப்ரகாசிகையில் அநுக்ரஹித்த ஸமாதாநத்தினுல் ஸம்சயம் ஸமாதாநம் பெருமல் நிற்கின்றதே என்பதாகவும் மற்றெரு ஸந்தேஹமானது நமது ஸ்வாமியால் உத்தாபநம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஸித்தாந்தத்திலும் எல்லா உபாஸநங்களிலும் விபூதி விசிஷ்டமாகவே ப்ரஹ்மத்தை த்யானிக்கவேண்டுமென்று கொள்ளவில்லை. ப்ரதர்த்தந வித்யை ஆநந்தமய வித்யைப்போன்றவற்றிலேயே உபாஸாத்ரைவித்ய மென்பது. ஸத்யத்வாதி லக்ஷணத்தின்படி சில வித்யைகளில் விசிஷ்ட ஜ்ஹமானது உபாஸ்யமென்பதுவும் ஸித்திக்கமாட்டாது; ஏனெனில் ஸத்யத்வாதி லக்ஷணமானது விசேஷ்ப ஸ்வரூபத்திற்கு மாத்ரமுள்ளது. சித சித் விசிஷ்டத்திற்குச் சேராது. இந்த லக்ஷணத்தின்படி சுத்த ஸ்வரூப மாத்ரமே எல்லா வித்யைகளிலும் உபாஸ்யமென்று சங்கிக்க இடமுண்டு. ஜந்மாதி காரணத்வம் லக்ஷணமாகில் இந்த ஆசங்கைக்கு இடமில்லை. சிதசித் விசிஷ்டத்திற்கும் ஜந்மாதி காரணத்வம் உண்டாகையால், இந்த லக்ஷணத்தின்படி விசிஷ்ட ப்ரஹ்மம் சில வித்யைகளில் வேத்யமாகத் தட்டில்லை. ஆகவே முன் கூறிய சங்கைக்கு இதில் இடமில்லை என்று இவ்வாருகவே உதாஹ்ருத ச்ருத ப்ரகாசிகையின் ஆசயம். இங்கு பாவப்ர காசிகையும் உற்று நோக்கத் தக்கது.

---

ஸ்ரீ:

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

### ஸர்வதாரி ஸூ கார்த்திகை (வ்ருச்சிக) மீ

| | | |
|---|---|---|
| 16—11—48 | 1உ செவ்வாய்க்கிழமை ... | வ்ருச்சிக பூர்ணிமா திதி: ஸர்வாலய வைகாநஸ தீபம் |
| 17—11—48 | 2உ புதன்கிழமை ... | ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம் |
| 18—11—48 | 3உ வியாழக்கிழமை ... | ஸ்ரீ திருப்பாணுழ்வார் திருநக்ஷத்ரம் |
| 24—11—48 | 9உ புதன்கிழமை ... | அஷ்டமி நவமி திதி த்வயம் |
| 27—11—48 | 12உ சனிக்கிழமை ... | ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி |
| 30—11—48 | 15உ செவ்வாய்க்கிழமை ... | ஸர்வ அமாவாஸ்யை |
| 4—12—48 | 19உ சனிக்கிழமை ... | ஸ்ரீ அஹோபிலமடம் 34-ம் பட்டம் அத்திப்பட்டு ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ரமஹா தேசிகன் திருநக்ஷத்ரம் |
| 11—12—48 | 26உ சனிக்கிழமை ... | வ்ருச்சிக சுக்ல ஏகாதசி திதி |
| 12—12—48 | 27உ ஞாயிற்றுக்கிழமை ... | அதிதி: ஸர்வ ஏகாதசி (கைசிக ஏகாதசி) |
| 13—12—48 | 28உ திங்கட்கிழமை ... | த்வாதசி திதி |
| 14—12—48 | 29உ செவ்வாய்க்கிழமை ... | வ்ருச்சிக சுக்ல த்ரயோதசி திதி. ஸ்ரீ திருமங்கைமன்னன் திருநக்ஷத்ரம் |

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌵𑌣𑍍𑌶𑌠𑌕𑍋𑌪𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

# ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[இது ஒரு மஹாகவியின் க்ருதி. முக்கூர் வித்வான் து. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியால் பழைய ஓலைச் சுவடிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.]

## 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃

1 [illegible] ।
[illegible] ॥

2 [illegible] ।
[illegible] ॥

3 [illegible] ।
[illegible] ॥

4 [illegible] ।
[illegible] ॥

5 [illegible] ।
[illegible] ॥

6 [illegible] ।
[illegible] ॥

7 [illegible] ।
[illegible] ॥

8 [illegible] ।
[illegible] ॥

9 [illegible] ।
[illegible] ॥

10 [illegible] ।
[illegible] ॥

189252

11 ஸ ஸவ-உஹ-ணஸம்வஹ ஸ்வவ-உஶாஸ்தவிஶாஈஉ: ।
வம் அகாஶுவஈஸ்வா ஷீஜஶிஉாஈாயயஸ்நுஷா ॥

12 ஸொஙஈஶுவாம் ஸவ-உஹ-ணெ ஸ்வாயீம் ஸ த்க-ஶுஸம்ஹவாழ ।
உவயெஜெ வஷ்திஈயொ யஶா கொஸஶுஈாட்ஸ-தாழ ॥

13 ஶ்ரூ ஹஸ்யொயஉ-உஉா ஶ்ரீ த்ய திஷ்டஷாவ ந-ஈ-ஶுவிணள ।
ஷம்வ தீ ஸஸ-வம் தத்ராக-ஈ-தாம் வாஸஉ-த்தஉழ ॥

14 வஸநு தத்ரு ஷ்விஜஉணி ஸ்ஸக-ஶுெ உ-வ்யஜெவதாழ ।
சயாஅத ஶ்ரீநிாவஸஉஙஹ்ரு ஹ்ணீஷ்வ ஸ த்ஸ-தழ ॥

15 ஊதி ஸம்ப்ராத்திதோ ஜெவொ வ்ருஷஹா அஶுஶெவஈ: ।
சஙஹ்ரு ஹ்ணா த்தயெஜெவ ஸ்யாஷிதி கெஶவஸ-ஏஈயெ ॥

16 சஙஹ்ரு ஹீதாதெ த்தெநவம் கெஶவாய-உஸ-யீவஈாகு ।
வஸ-ஜெவா ஜெ்வகீவ தஜ்ஞாயா ஹஹ-உ உாஷயெ ।

17 யஶ்ரு தஹஹ-உா த- தஜ்ஞாயா ஈஈாஜ வஈயா ஶ்ரியா ।
கௌஸஶ்யா ஈாஉஹஹெ-உ அ க்ருஷ்ணஹஹெ-உ அ ஜெவகீ ॥

18 உாஸெ ஹாஷ வஷாஷிவெ்ய கநயா உ-வஹெதெஈவள ।
ஜெய்ஷ்டாஷியா ந நக்ஷத்ரே ஶுஜ்ஞெ வஈஉஶொஹெந ॥

19 ஶ-ஹெ உ-ஹஶுதெ-உ ஸம்வ-ஏணெ-உ ஹ-ணெ:
வஈஉஶொஹெந: ।
ப்ராஸ-ஶுத ஸ-ஏஙம் தஜ்ஞாயா உ-க-ஙம் ஜெவகீ யஶா ॥

20 தஸ்யாஸ்ஸ-ஏஙவி-உஈ-ஈ-ஜெ ஸவ-உஸக்ஷவஸஉாஶ்ரய: ।
வஸ்யாஸ: வஈாஶஈஸெ்யவ வ்யாஸஸ்ய அ ஶ-கொ யஶா ॥

21 ஜாதஸ்ஸ-த ஊதி ப்ராக்தாம் வாஅம் ஶு -க்ஷவா உ-ஷாஙிதஃ ।
கெஶவாய-உ ஸ்துஷா ஸ்நாதெதா ஹா: வடாநு ஸ-உநெநாஹஈாநு ॥

22 விக்தாதி விவியா ந்யாஶ- ஹ-ஏஸ-ஈெஹ்ய: ப்ருஷாய அ ।
தஸ்ய ஸ்வஸ்ய தந-ஏஜஸ்ய ஜாதகஉ-உ தஷாகஈொகு ॥

23 ஶ்ரீவாஸாந-ஹ ஹெணெவ ஜாதம் ஸ்வஸ்ய தநஶுஹவழ ॥
ஶ்ரீநிவாஸ ஊதி வ்யாத நாஉா நஉகரொ த்தஷா ॥

24 ஷ்வ-ந்தூ உ-வஉபீக்ஷ்ய வாஉா நந் த-ஜியூ: ।
ஜெநெ ஸம்வ-அண-உாஜீா நம் கெஶவாய-உ ஸ்ஸ-யீவா: ॥

25 தஸ்ய ஜாதம் ஸ-தம் உ ஷ-உா ஶதா த்விஜஸத்தமா: ।
உவாய நாமி ஶ்ரு ஹண ஸ்வஸ்ய வெஶ்ம ஸஉாவிஶநு ॥

26 உாத- ஶம்கெ ஸ்திதம் பாஶும் உ-க-நுஉிவ ஹாஸ்வஶழ ॥
ஸூநீஶக-ஞஶும் அ ந கஶா த-ஶ்யுஶாடிகழ ॥

27 விஉஶாஸ்யம் ஸ-தீவ-ஶக்ஷம் ஹ ஹஸ்யாம் விஜிதகாஉ-உ-கழ ।
பிம்பொஷ்உ-ஹதாம் நாஸாம் பிஹ ாணம் ஸ-கவொஶகம் ॥

28 கம்ப-கண்ம் ஸ்மஶதஶஹ-ஜஉஅஶுஸஉத்வி தழ ।
விஶாஶுவக்ஷஸம் ஸிம்ஹகடிஉாவத-உ நாஹிகழ ॥

29 ஸூஜா ந-ஶும்பவாணிம் அ ஜம்வாவிஜிதகாஹஸிழ ।
ஸூதாஉ அஶணஷ்வம்ஷ்வ-ஸ்கம் விஜிதஉநுயழ ।

30 உஉஸ்ஶ- விஉஸிதாகாஶா ஸஅ-ஶெதெ வஶஸ்வஶழ ।
கெஶவாயஉஸ்ய ஹாஶ்யம் நொ வக்த-ம் ஶக்தா உயத்தியா ॥

31 கஸஉ பாஶுஸ- ஸம்வஅணெ-உா ஶுக்ஷிணெ ஶ்ம-ஹஸஅவிகெ: ।
ஶிஶ-தெவி ஸ்வதெஜொஹி: ஶுஶுதா ஹாஶதி வஶ்யதாழ ॥

32 நிஶஉாஞஶ-ஶ- ஸ்ஸாயஉயவா ஹாஷ்யகா ந-நி: ।
நாயொ வா யாஉ-நொ வாய வ-நஶெவ ஸஉாஶத: ॥

33 வஶித்ராணாய ஶொகாநாம் உத்நாநாம் ஹவஸாஶஶெ ।
ஜ்ஞாநவெஶாஶ்யஸம்வ-அண-உ ஸஉநுஷாநதத்வஶ: ॥

34 ஸவ-உஶாஸாய-உதத்வஜ்ஞ: ஶொகா அாயெஉா ஹவெஉயழ ।
உதஸ்யாஶிஷம் வ்யய-ம்ஜாநா த்விஜா ஜஶ- ஸ்வஉாஶுயழ ॥

35 அஉஶெஷாவநய நாதீநீ தத்த்ராணெ வியாய அ ।
கெஶவாய-உ ஸ்ஸ்வாதீஉஹவம் விஉ்யாஹ்யாஸஉகாஶயத் ॥

36 ஸ்ரீவாஸநாதா வ-த்ரொவி க்ருஷ்ண ஸ்ஸாதிவிநெய-உயா ।
கஶ்ருஹண த்ஸ்விதஸ ஸ்வ-ா: கஶாயிஷணஸந்நிஹ: ॥

37 ஸாம்ஶெஷ- ஸவ-உவெஉெஷ- ஸாஹிதெய்ய ஶும்க்ருதஉ தயா ।
ஶீஉாம்ஸாயாம் ஶபஶாஸ்ஸெ தகெ-உ ஜ்யொதிஷகெ தயா ॥

ஸ்ரீ:

# செய்திகள்

## ஸ்ரீ வைஷ்ணவ ஸபை, கரூர்

ஸ்ரீ அஹோபில மடம் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதழகியசிங்கரின் க்ருபா கடாக்ஷத்திற்குப் பாத்ரர்களான இந்நகர வாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, சென்ற புரட்டாசி மீ 11வ ஞாயிற்றுக்கிழமை (26—9—48) பகல் 3-மணிக்கு, கரூர் ஸ்ரீ அபயப்ரதாந ரங்கநாத ஸ்வாமி தேவஸ்தாந வாஹந மண்டபத்தில் ஒரு ஸபை உபக்ரமித்து நடத்தினார்கள். இவ்வைபவத்தில் கலந்து கொள்வதெற்கென, மேலப்பாளையம் புலியூர் முதலிய ஸ்ரீ க்ராமங்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் பல ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தனர்.

வேத பாராயணத்துடன் ஸபை உபக்ரமிக்கப்பட்டது. பின்னர், அட்வொகேட் ஸ்ரீ உப. S. ரங்க அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ உப. வித்யாரத்நம் மீமாம்ஸா விசாரதா மதுராந்தகம் வங்கிபுரம் ரங்கநாதாசார்ய சிரோமணி ஸ்வாமியை ஆத்யக்ஷ்யம் வஹிக்கும்படி ப்ரார்த்தித்தார். ஸ்வாமியும், க்ருபையுடன் ஆத்யக்ஷ்ய பீடத்தை அலங்கரித்து, இந்த ஸபையின் தத்வத்தையும் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் பெருமையையும் ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தின் பரந்த நோக்கங்களையும் ஸரஸ மதுர கம்பீரமான ஸ்ரீ ஸூக்திகளால் அழகாக உபந்யஸித்தார்.

பின்னர் இந்நகர ப்ரபல வக்கீலும் இந்த ஸபையின் ப்ரஸிடெண்டுமான ஸ்ரீ உப. நெரூர் க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி 'பக்தி ப்ரபத்தி' என்னும் விஷயத்தைப் பாமர ஜநங்களும் நன்கறியும் வண்ணம் கேட்போர் மனம் உருகும்படி உபந்யஸித்தார்.

பின்னர் ஸ்ரீ அத்யக்ஷ ஸ்வாமி, நெரூர் ஸ்ரீ. உப. வே. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, 41-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகிய சிங்கரிடத்தில் ஸ்ரீ பாஷ்யாதிகளை அதிகரித்தவர் என்றும், பக்தி ப்ரபத்திகளின் ஸ்வரூபங்களை விளக்கிக் காட்டியவிதம் மஹா ஜ்ஞாதாக்களின் பந்தாவை அநுஸரித்திருக்கிறதென்றும், ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து நம் ஸம்ப்ரதாயத்திற்கு மேல் மேலும் விசேஷமாக ஆதரிக்கவேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைத் தாம் மனப்பூர்வமாக ப்ரார்த்திப்பதாயும், இன்னும் திரள் திரளாக ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்து இந்த ஸபையை அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்றும் சொற்பொழி வாற்றினர்.

பின்னர் ஸ்ரீமான் வக்கீல் S. ரங்க அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவடியை ஆச்ரயித்த அநேக திருநாமங்கள் இங்கும் சுற்றுப்புற க்ராமங்களிலுமுள்ளபடியால், இங்கு ஓர் அஹோபில மடம் ஸ்தாபித்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ப்ரதிஷ்டை பண்ணி அநுக்ரஹிக்கும்படி ஸ்ரீ அழகியசிங்கரின் திருவடிகளில் பொது ஜநங்களின் சார்பாக விஜ்ஞாபித்துக் கொள்வதாகவும் விண்ணப்பித்துக்கொண்டார்.

பின்னர் வக்கீல் ஸ்ரீமான் K. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அங்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கும், ஆத்யக்ஷோபந்யாஸாதிகளைச் செய்த ஸ்வாமிகளுக்கும் தந்யவாதம் ஸமர்ப்பித்தார். ததநந்தரம் ஸ்வாமிகளின் கோஷ்டி அப்படியே போட்டோ பிடிக்கப்பட்டது. பின்னர் கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஷை கூட்டம் அடுத்தபடியாக ஞாயிற்றுக்கிழமை கூடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந் நகரில் பத்துத் தினங்கள் மதுராந்தகம் ஸ்ரீ உப. ரங்கநாதாசார்ய ஸ்வாமி விசேஷ உபந்யாஸங்கள் ஸாதித்து வந்தார். முடிவில் அட்வொகேட் ஸ்ரீமான் N. வேதாந்தாசாரியர் பவநத்தில் 'ஸீதா கல்யாணம்' காலக்ஷேபம் விமர்சையாக நடந்தேறியது. முடிவில் ஸ்வாமிக்கு இந்நகர வாஸிகளின் சார்பாக வேஷ்டியும், ரூபாய் 200 ரொக்க ஸம்பாவனையும் ஸமர்ப்பிக்கப்பட்டன.

**S. குப்புஸாமி அய்யங்கார்**

[காரியதரிசி, ஸ்ரீ வைஷ்ணவ ஸபா, கரூர்.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌵𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

# ஸம்பாதகரின் குறிப்புக்கள்

விரோத பரிஹாரம்

'வேதாந்த கேஸரி' என்னும் ஆங்கில பத்ரிகையின் அக்டோபர் மாஸத்து ஸஞ்சிகையில், உபநிஷத்துக்களில் பரஸ்பர விருத்தங்கள் போலக்காணப்படும் வாக்யங்களுக்கு ஒரு ஸமாதாநத்தை ஸ்ரீமான். வி. த்யாகராஜ ஐயர் என்னும் எம். எ. பரீக்ஷை தேறின ஒருவர் எழுதியிருக்கிறார். உபநிஷத்துக்களில் அம்மாதிரி வாக்யங்கள் காணப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால், அவைகளை ஊன்றிப் பாராமல் ஆபாதத: பார்க்குமவர்களுக்கே அவை விருத்தங்கள் போலக் காணப்படும். ந்யாய ஸஞ்சாரம் செய்து உபநிஷத் வாக்யங்களின் உட்கருத்தை அறிந்தவர்களுக்கு அவை அவிருத்தங்களே என்பது நன்கு விளங்கும். நமது ஆசார்யர்கள் அப்படிப்பட்ட ந்யாய விசாரம் செய்து த்ருப்திகரங்களான பரிஹாரங்களை அநுக்ரஹித்திருக்கிறார்கள். ஸ்ரீ த்யாகராஜ ஐயர் அந்தப் பரிஹாரங்களைப் படிக்கவில்லை என்றே நாம் நினைக்கிறோம்.

ஸ்ரீ ஐயரவர்கள் சொல்லும் பரிஹாரம் என்னவென்றால்:—'நம்மால் எதிர் பார்க்கப்படும் பரம புருஷார்த்தம் [அதாவது பரம் பொருள்] நாம் இவ்விடத்தில் அநுபவிக்கும் புருஷார்த்தங்களுக்குள் மிகவும் உயர்ந்ததென்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறான எண்ணம். பரம் பொருள் ப்ராக்ருத பொருள்களைக்காட்டிலும் அத்யந்த விலக்ஷணம். ப்ராக்ருத புருஷார்த்தத்தை நம்முடைய முயற்சியால் பெறுவதுபோல அது பெறக் கூடாதது. அந்தப் பரம புருஷார்த்தத்தைக் கொடுக்கக் கூடிய பரம்பொருளே நமக்குக் கதி என்று எவர்கள் அதை ஶரணமாக அடைகிறார்களோ அவர்களுக்கு உயர்ந்த ஜ்ஞாந மொன்று ப்ரகாஶிக்கும். அப்பொழுது அதில் ப்ரஸ்துத விரோதங்கள் இருக்கக்கூடும் என்பது விளங்கும். இதுதான் இவர் சொல்லும் ஸமாதாநம்.

நமது ஆசார்யர்களின் நிர்வாஹம் எப்படிப்பட்டதென்பதை இரண்டொரு விஷயங்களை எடுத்துக்கொண்டு விளக்குகிறோம். உபநிஷத்தில் சில விடங்களில் ப்ரஹ்மமும் ப்ரபஞ்சமும் பிந்ந வஸ்துக்கள் என்றும், மற்றும் சில விடங்களில் அவை இரண்டும் அபிந்நங்க ளென்றும் சொல்லப்பட்டிருக்

கின்றன. பேதமும் அபேதமும் விருத்த தர்மங்களாதலால் ஒரே வஸ்துவி னிடத்தில் அவை இரண்டும் இருக்கின்றன வென்று சொல்வதில் ந்யாய விரோ தமே ஸம்பவிக்கும். ஸ்ரீ த்யாகராஜ அய்யர் ஸ்வரூபத்தினிடத்தில் அவை இரண்டும் இருக்கின்றன என்றும், ஆனால் ஞானம் வந்தவுடன் அப்படி அவை இரண்டும் ஒரே வஸ்துவினிடத்தில் இருப்பது அஸங்கதமாகத் தோன்று தென்றும் சொல்லுகிறார். நமது ஆசார்யர்களோ வேறு விதமாக இதற்கு நிர் வாஹம் செய்கிறார்கள். ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" இத்யாதியான வாக்யங்கள், சேதநாசேதநங்க ளடங்கிய இப்ரபஞ் சம் முழுவதும் பகவானுக்கு ஶரீரமென்றும், அவைகளுக்குப் பகவான் சரீரி என்றும் சொல்லுகின்றன. ஈச்வரனுக்கு சரீரித்வமாவது: சேதநாசேதந த்ரவ்யங்களைப் பற்ற நியமேந தாரகமுமாய் நியந்தாவுமாய் ஶேஷியுமாய் இருக்கை. சேதநாசேதநங்களுக்கு சரீரத்வமாவது: ஈச்வரனைப் பற்ற நிய மேந தார்யமுமாய் நியாம்யமுமாய் ஶேஷமுமான த்ரவ்யமாயிருக்கை. இப்படி ப்ரபஞ்சம் முழுவதும் நியமேந தார்யமுமாய் நியாம்யமுமாய் ஶேஷ முமாயிருக்கையால் அது ஈச்வரனுக்கு சரீர மாகிறதென்று சொல்லக்கூடு மன்றோ? சரீரவாசியான சப்தங்களெல்லாம் சரீரி பர்யந்தம் பர்யவஸித மாகின் றன என்பது அநுபவ ஸித்தம். ஆகையால் ப்ரபஞ்சம் என்னும் சப்தம் அதற்கு ஶரீரியாயிருக்கும் ஈச்வரனையும் குறிக்கும். நாம் சரீரத்தையும் சரீரியையும் தனித்துப் பேசும்பொழுது அவை இரண்டையும் பிந்நங்களாகவே பேசுகின் றோம். சரீர விசிஷ்டமான சரீரியை ப்ரஸ்தாவிக்கும் பொழுது அவைகளை அபிந்நங்களாகவே க்ரஹித்துப் பேசுகிறோம். இப்படி ப்ரஹ்மத்தையும் ப்ரபஞ்சத்தையும் அபிந்நங்களாகப் பேசுவதும், பிந்நங்களாகப் பேசுவதும் உபபந்நங்களே.'

இம்மாதிரியே ப்ரஹ்மம் ஸகுண மென்றும் நிர்குண மென்றும் சொல்லும் உபநிஷத் வாக்யங்களுக்கு ஸமஞ்ஜஸமான பரிஹாரத் தை நமது ஆசார்யர்கள் விளக்கி யிருக்கிறார்கள். நிர்குண மென்று சொல்லப்படுமிடத்தில் ஹேயகுணரஹிதன் என்பது பொருளென்றும், ஸகு ணமென்று சொல்லப்படுமிடத்தில் கல்யாணகுண ஸஹிதன் என்பது பொருள் என்றும் நமது ஆசார்யர்கள் விபாகம் செய்திருக்கிறார்கள். இது ச்ருதி ஸம்மத மென்பது "அபஹதபாப்மா" என்று ஆரம்பித்து "ஸத்யஸங்கல்ப:" என்று முடியும் வாக்யத்தால் விளங்கும். ஹேயகுண மில்லை என்பதும் கல் யாண குணம் உண்டு என்பதும் இந்த ஒரே வாக்யத்தில் சொல்லப்பட்டிருக் கின்றன அல்லவோ? இம்மாதிரி ஸங்கதமாகவும் ந்யாய விரோதமு மின்றிக்கே பரிஹாரங்கள் இருக்க, ஸ்ரீ த்யாகராஜ ஐயர் சொல்வதுபோல் ந்யாய விருத்த மாகவும் அஸங்கத மாகவும் இருக்கும் ஸமாதாநங்கள் எப்படி ப்ராமாணிகர்க ளால் அங்கீகரிக்கப்படும்? இதைப்பற்றி வேறு விஷயங்களையும் உபபாதிப்ப தானல் அந்த உபபாதநம் விஸ்த்ருதமாகும் என்று பயந்து இதனுடன் இந்த ப்ரஸ்தாவத்தை நிறுத்திக் கொள்ளுகிறோம்.

* * * *

இந்தத் தென்னிந்தியாவில் சிற்சில ஸ்தலங்களில் சிற்சில பாடசாலைகளும் வித்வத் ஸதஸ்ஸுக்களும் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன வென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். திருக்குடந்தையில்

வித்வத்ஸதஸ்ஸுக் களும், வைதிக பாடசாலைகளும்.

பஹு காலமாக வராஹக்குளத் தெரு ஸ்ரீ. உப. ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களால் வார்ஷிக ஸதஸ் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு இப்பொழுதும் அது நடத்தப்பட்டு வருகின்றது. அவர் காலத்திற்குப் பிறகு ரிடையர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. ராகவய்யங்கார் ஸ்வாமியினுடைய அவலம்பத்தைக் கொண்டு ஸ்ரீ. ரங்கஸ்வாமி அய்யங்காருடைய புத்ரர்கள் அந்த ஸதஸ்ஸை மிகவும் த்ருப்திகரமாக நடத்தி வருகிறார்கள், இவ்வர்ஷத்திலும் அந்த ஸதஸ் சென்ற மாஸத்தில் நடைபெற்ற தென்று நாம் அறிகிறோம். இம்மாதிரியே இன்னும் சில திவ்ய தேசங்களிலும் வித்வத் ஸதஸ்ஸுக்களும் வைதிக பாடசாலைகளும் நடந்து வருகின்றன. ஆனால், அவை வ்ருத்தி பெறாமல் க்ஷயித்துக் கொண்டு வருகின்றன. பண்டைக்காலத்து ராஜாக்களுடைய அரண்மனைகளிலும் அம்மாதிரியான தனிகர்களுடைய மாளிகைகளிலும் ஸதஸ்ஸுக்களும் பாடசாலைகளும் விசேஷமாக நடந்து வந்தன வென்பதை நாம் கேட்டிருக்கிறோம். காலத்தின் கொடுமையாலோ நம்மால் அறியப்படாத வேறு காரணங்களாலோ அவைகளெல்லாம் மலினமாகிவிட்டன. புதுக்கோட்டையில் வார்ஷிக ஸதஸ்ஸுக்கள் மிகச் சிறப்புடன் நடைபெற்று வந்தன வென்பதை நாம் ஸாக்ஷாத்தாக அறிவோம். அந்த ஸதஸ் கூடுங் காலத்தில் பல தேசங்களிலிருந்து அநேக சிறந்த வித்வான்கள் கூட்டங்கூட்டமாக அவ்விடம் போவதுண்டு. அவ்விடத்தில் அவர்கள் உசிதமாக ஸகலமான ஸௌக்யத்துடன் ஆராதிக்கப்பட்டுத் தகுந்த த்ரவ்ய ரூபமான ஸம்பாவனையும் கொடுக்கப்பட்டு வந்தார்கள். இப்பொழுது புதுக்கோட்டை ராஜ்யத்தின் ஸ்வரூபம் அழிந்தவுடன் அந்த வித்வத் ஸதஸ்ஸும் போய் விட்டது. அவ்விடத்தில் வித்வான்களுடைய ஆதரவும் இப்பொழுது காணப்படவில்லை. இம்மாதிரி பல விடங்களில் நடந்துவந்த ஸதஸ்ஸுக்களும் பாடசாலைகளும் காணாமற்போகவே நமது வித்யைக்கு ஆத்யந்திக லோபம் வந்துவிடுமோ வென்று சில தார்மிகர்கள் பயந்து, தங்கள் சொத்திலிருந்து ஓரம்சத்தைப் பாடசாலைக்காகவும் வித்வத் ஸதஸ்ஸுக்காகவும் உபயோகார்ஹமாகும் படி எழுதி வைத்திருப்பதைப் பார்க்கிறோம். இதிலிருந்து நம்முடைய வித்யைக்கு இன்னமும் ஜீவன் தரித்திருக்கின்றதென்னும் ஓர் ஆச்வாஸம் நமக்கு ஜநிக்கின்றது. சென்ற எழு வர்ஷங்களாக ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் ஓர் சிறந்த சாஸ்த்ர பாடசாலையையும் ப்ரதிவர்ஷமும் ஒரு வித்வத் ஸதஸ்ஸையும் நடத்திவருகிறார். தவிர: தஞ்சாவூர் ஜில்லாவில் ராஜமன்னார் ஸந்நிதியில் ஸ்ரீ ராஜகோபால மூர்த்தியின் ப்ரஹ்மோத்ஸவ காலத்தில் சிறப்புடன் நடக்கும்படி ஒரு பெரிய வித்வத் ஸதஸ்ஸை ஸ்தாபித்தும், அதற்கு அநுபந்தமாக ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்தாபித்தும், அவ்விடத்தில் பெரிய தார்மிகராய் இருந்த ம-ா-ா-ஸ்ரீ கோட்டூர் ரங்கஸ்வாமி முதலியார் என்னும் பெரியார் அவற்றைச் சற்றேறக்குறைய இருபது ஸம்

வத்ஸரங்கள் நடத்திவந்தார். இப்பொழுதும் அவருடைய ஸந்ததியார் அவைகளை நடத்திவருகிறார்கள் என்றே நாம் நம்புகிறோம். இம்மாதிரியே அந்த ஸ்தலத்தில் அக்ரஹாரத் தெருவென்று வ்யவஹரிக்கப்படும் ஒரு பெரிய வீதியில் ஸ்வல்ப காலம் முன் ஸ்ரீ. உப. அண்ணாஸ்வாமி அய்யங்கார் என்னும் ஒரு ப்ரபு இருந்தார். அவரால் வேத பாடசாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகின்றது. சற்றேறக்குறைய நாலைந்து வர்ஷங்களுக்கு முன் அவருடைய ஸந்ததியில் ஜநித்த 'மைனர்' என்று சொல்லப்படும் ஒரு உதார சித்தரால் வித்வத் ஸதஸ் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, அது மிக்க சிறப்புடன் நடந்து வருகின்றது என்பதை நாம் கேட்டு ஆநந்திக்கிறோம். இந்த ஸதஸ்ஸில் ஒரு விசேஷித்த ஆகாரம் இருப்பதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரியான ஸதஸ்ஸுக்களில், வைஷ்ணவர்களால் நடத்தப்படும் ஸதஸ்ஸில் வைஷ்ணவர்களுக்கும், ஸ்மார்த்தர்களால் நடத்தப்படும் ஸதஸ்ஸில் ஸ்மார்த்தர்களுக்கும், மாத்வர்களால் நடத்தப்படும் ஸதஸ்ஸில் மாத்வர்களுக்கும் ப்ரவேசம் இருப்பதை ப்ராயேண நாம் காண்கிறோம். அப்படிப்பட்ட வேறுபாடு தோஷாவஹமென்று அதைத் தூர விலக்கி, இந்த ஸதஸ்ஸை நடத்துமவர்கள் மூன்று மதஸ்தர்களிலுமுள்ள வித்வான்களுக்கு ஸதஸ்ஸில் அந்வயத்தைக் கொடுத்து வாக்யார்த்தங்களையும் உபந்யாஸங்களையும் நடத்திவருகிறார்கள். "அயம் நிஜ: பரோ வேதி கணநா லகுசேதஸாம்| உதாரசரிதாநாந்து வஸுதைவ குடும்பகம்." இந்த மூன்று மதஸ்தர்களும் தந்தம்முடைய ஸித்தாந்தங்களுக்கு வேதத்தையே ப்ரமாணமாக அங்கீகரித்தவர்களே. ஆனால் வேத வாக்யங்களின் உட்கருத்தைக் கண்டு பிடிப்பதில் மநுஷ்யர்களுக்குள் அபிப்ராய பேதங்கள் ஏற்படுவது ஸஹஜமே. அந்த அபிப்ராய பேதத்தைப் பெரிதாகப் பாராட்டாமல் எல்லாரும் ஒன்று சேர்ந்து தத்வ விசாரம் செய்வதே ஸ்வரூபம் தெரிந்தவர்களின் லக்ஷணம். அப்படிப்பட்ட உதார சிந்தையுடன் இந்த ஸதஸ்ஸை நடத்துமவர்கள் அதை ஒற்றுமையாய் நடத்திவருகிறார்கள் என்பது மிகவும் புகழத்தக்கதே. இவ்வாஷத்தில் இந்த ஸதஸ்ஸு சென்ற புரட்டாசி மாஸத்தில் நடைபெற்றது. பல விடங்களிலிருந்து சிறந்த வித்வான்கள் வந்திருந்தார்கள். அருமையான விஷயங்களைப்பற்றி அழகாக உபந்யாஸங்களும் நடந்தன. அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாயிருந்த வித்வான்களிடமிருந்து நாம் கேள்விப் படுவதில், இதற்கு முன் வருஷங்களில் நடந்த ஸதஸ்ஸுக்களைக் காட்டிலும் அநேக ப்ரகாரங்களில் இவ்வருஷத்திய ஸதஸ்ஸு ஶ்லாகாவஹமாக இருந்ததென்பதை நாம் அறிகிறோம். ஸத்துக்களான பெரியோர்கள் ஆர்ஜவத்துடனும் ச்ரத்தையுடனும் ஒரு கார்யத்தில் ப்ரவேசித்தால் அதில் தோஷமென்பது எப்படி ஸம்பவிக்கும்? இவ்வாறு நிர்த்துஷ்டமாக இந்த ஸதஸ்ஸை நடத்திவரும் 'மைனர்' ஸ்வாமிக்கும், அவருக்கு ஸஹாயமாக இருந்து அந்த ஸதஸ்ஸை நடத்திவைக்கும் மஹான்களுக்கும், நாம் நம்முடைய ஹார்த்தமான ஸபாஜநத்தை விநயத்துடன் தெரிவிக்கிறோம்; உத்தரோத்தரம் இந்த ஸதஸ்ஸு அபிவ்ருத்தமாக வேண்டுமென்றும் பகவானை ப்ரார்த்திக்கிறோம்.

189252
சென்னை 600 008

லக்ஷிதமானுல் அந்த விபூதியை நியமநம் செய்வது முதலிய குணங்கள் அபேக்ஷிதங்களாகிறபடியால் குணங்களுக்கு க்ரஹணம் நிச்சயம் ஏற்படுமன்றோ? ஆகையால், குணங்கள் விபூதி இவையிரண்டுக்கும் அந்தர்ப்பாவத்தை ஜ்ஞாபிக்கும் ஜந்மாதி லக்ஷண ஸூத்ரத்தை ஸூத்ரித்தார்.' இது ச்ருத ப்ரகாஶிகாசார்யர் அநுக்ரஹித்திருக்கும் ஸமாதாநம். இது நமது ஸந்தேஹத்தை ஶமநம் செய்யவில்லை. விபூதியைக் கொண்டு ஸ்வரூபம் லக்ஷிக்கப்படும்பொழுது ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களின் அந்தர்ப்பாவம் ஏற்படுவதுபோல் குணங்களைக் கொண்டு ஸ்வரூபம் லக்ஷிக்கப்படும்பொழுது ஸர்வ ஶப்தத்தில் அகப்பட்டிருக்கும் விபூதி அபேக்ஷித மாகையால் அந்த விபூதிக்கும் அந்தர்ப்பாவம் ஏற்படு மென்று ஏன் நிர்வஹிக்கக் கூடாது? அப்பொழுது இரண்டு லக்ஷணங்களுக்கும் வாசியிராமல் இருப்பதால் ஒன்றை ஆதரித்தும் மற்றென்றை அநாதரித்தும் பேசுவதற்கு ஹேது வில்லையே என்னும் ஸம்ஶயம் ஸமாதாநம் பெருமல் நிற்கின்றதே. இதற்கு ஸமாதாந மென்ன? ஒரு கால் விபூதி விஶிஷ்ட ப்ரஹ்மமே உபாஸநார்ஹ மென்று நினைக்கலாம். அப்படி நினைப்பதற்கு ந்யாயமில்லை. 'ஜீவமுக்ய ப்ராணலிங்காத்' இத்யாதியான ஸூத்ரத்தில் ப்ரஹ்மத்தை ஸ்வரூபத்தாலும் போக்ருத் வர்க்க ஶரீரகத்வத்தாலும், போக்ய போகோபகரண ஶரீரகத்வத்தாலும் அநுஸந்திக்கலா மென்று விளக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் இந்த அநுஸந்தாநங்களுக்குள் ஏற்றச் சுருக்கங்கள் ஒன்றும் சொல்லப்படவில்லை. இவ்விடத்தில் ச்ருதப்ரகாஶிகையில், 'ஸ தத்த்வாதிகுணாநநுபூய ப்ரஹ்மாஸ்வாதநம் ... கம் ... பத்தோ வா ஸீந: நிரதிஶயாநந்தம் வஶாத்தாநந்தம் பவதி' [ப்ரஹ்மத்தைக் குணங்களை மாத்ரமிட்டு அநுஸந்தாநம் செய்கிறவனும், போக்ய பூதமாகிற பரமாத்மாவைத்தான் போக்தாவாக இருந்து கொண்டு அநுபவிக்கிருன்] என்று விவரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் ப்ரஹ்மத்தை அநுஸந்திக்கும்பொழுது விபூதி விஶிஷ்டமாகவே அநுஸந்திக்கவேண்டு மென்னும் நிர்ப்பந்த மொன்றுமில்லை யென்று தெரிகிறதே.

* * * *

'ஸ்ரீ ராமாநுஜன்' என்னும் பத்ரிகையை நாம் வரப்பெற்ருேம். இது இப் பத்ரிகையின் முதல் தொகுதியின் முதற் பகுதி. இதன் ஆசிரியர் ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி. சென்ற வர்ஷத்தில் இந்த ஸ்வாமி 'ஸத் க்ரந்த ப்ரகாஶந ஸபை' என்னும் பெயரால் ஒரு ஸபையை ஏற்படுத்தி அதை ஒழுங்காக நடத்தி வருகிருர். இந்த ஸபையின் சார்பில் அவர் இப்பத்ரிகையை நடத்த ஆரம்பித்திருக்கிருர்.

'ஸ்ரீ ராமாநுஜன்'

ஸ்ரீ பராஶர பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கச்செய்தே, 'ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம்' என்று ஒரு ஸ்தோத்ரத்தை அருளிச்செய்திருக்கிருர்.

ஸ்ரீ கூரத்தாழ்வானுடைய இளைய திருக்குமாரரான ஸ்ரீ வேதவ்யாஸ பட்டர் என்கிற ஸ்ரீராமப் பிள்ளையின் திருக்குமாரரான வேதாசார்ய பட்டர் ‘க்ஷமா ஷோடஶீ ஸ்தோத்ரம்’ என்னும் ஒரு ஸ்தோத்ரத்தை அருளிச் செய்திருக்கிறார். இந்த இரண்டு ஸ்தோத்ரங்களையும் எளிய தமிழ் உரையுடன் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி இந்த ஸஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறார். இவைகளை நமது பெரியோர்கள் ப்ரதி தினம் காலையில் அநுஸந்திப்பதுண்டு. ஸ்ரீ பட்டர்போன்ற நமது பூர்வாசார்யர்களின் திருவாக்கின் மஹிமையைப் பற்றி நாம் புகழ்ந்து பேசுவது ஸாஹஸமேயாகும். அம்மாதிரியே உரையாசிரியருடைய ஸூக்திகளின் பெருமையைப்பற்றிப் பேசுவதும் அதிஸாஹஸமே. இந்த ஸ்வாமியின் உபந்யாஸங்களையும், அவர் அநுக்ரஹித்துள்ள அருளிச் செயல்களின் உரையையும், நாம் பூர்ணமாய் ஸேவித்து ஆநந்தத்தை அநுபவித்திருக்கிறோம். அவருடைய ஸூக்திகளின் தெளிவும் அழகும் அந்யாத்ருஶங்கள் என்பது ப்ரஸித்தம். ப்ரக்ருத உரையும் அப்படியே. இம்மாதிரி பரோபகாரத்தைச் செய்துவரும் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமிக்கு நமது ஹார்த்தமான நன்றி உரியதாகும்.

---

## நாட்டில் ஒரு ரஸோக்தி

“வலையுளகப்படுத்தென்னை நன்னெஞ்சங் கூவிக்கொண்டு
அலைகடற் பள்ளியம்மானை யாழிப்பிரான் தன்னைக்
கலைகொளகலல்குல்தோழீ நங்கண்களாற் கண்டு
தலையில் வணங்கவுமாங்கொலோ தையலார் முன்பே”

[திருவாய்மொழி 5-3-7]

இத்திருவாய்மொழியை ஆழ்வான் ராஜேந்த்ர சோழனில் ஸந்த்யா ஸதஸ்ஸிலே நிர்வஹியாநிற்க, ஆமருவிநிரைமேய்த்தான் நம்பியார் என்று நூறு வயஸ்ஸு போந்திருப்பார் ஒருவர் நடுங்க நடுங்க எழுந்திருந்து நின்று, ‘ஆழ்வான், தலைமகள் தலையாலே வணங்கப்பெறுமோ?’ என்ன, ‘பெறும்; ஶிஷ்டாசாரம் உண்டுகாணும்; ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் அநுஷ்டித்தாள் காணும் ‘ஶிரஸாऽபிவாத்ய’ என்று. ‘கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:’ என்று ஜநக குலத்திலுள்ளார்க்கு மேலில்லையிறே ஆசாரத்துக்கு. நாட்டில் ஸ்த்ரீகள், ‘இங்கிருக்கும் நாளைக்கு நமக்கு ரக்ஷகனையும் பின்பு நரகத்தில் புகாதபடி பரிஹரிக்கைக்கும் ஒரு பிள்ளை வேணும்’ என்று நோன்பு நோற்றுப் பெறுவார்கள்; அங்ஙனன்றிக்கே எங்கள் மாமியார் தன் நெஞ்சில் உண்டான அகலத்தாலே ‘லோகத்துக்காக ரக்ஷகனை வல்லானொரு பிள்ளையைப் பெறவேணுமென்று நோன்பு நோற்றுப் பெற்றார்; அவர் நினைவு தப்பவோ, அந்த லோகத்துக்குள் அந்தர்ப்பூதை யல்லனோ நான்?’ என்று அருளிச்செய்தான்.

மும் உம்மா லல்லவோ உயிர் பெற்று உலாவுகிறது? அன்று உமது குமாரனை இந்த்ரன் அடித்ததன் காரணமாக அரை க்ஷணம் கடுஞ்சின முற்றீரே! அத் தருணம் உலகம் எவ்விதம் தடுமாறித் தத்தளித்தது? உம்முடைய க்ருபைதான் அனைவருக்கும் அத்யாவச்யம். இதோ இவ்வுயர்ந்த ஸிம்ஹாஸநத்தை அலங் கரியும்.

வாருங்கள், வாருங்கள். தநாதிபதி யல்லவா தாங்கள்? ஸௌக்யமா? அலங்காரத்தைக் கண்டதுமே விளங்குகிறது உங்கள் செல்வப் பெருக்கு. தநவானுயிருக்கலாம்; ஔதார்யம் இருக்கவேண்டு மல்லவா? அப்பெருந்தன்மை உம்மிடம் சிறந்து விளங்குகிறது. வேண்டுபவர்களுக்கு வாரி வாரி வழங்கும் வள்ள லல்லவா நீர்? இவ்வுயர்ந்த ஆஸநத்தில் உட்காரவேண்டும். [இவ்வாறு அனைவரையும் நல்வரவு கூறி க்ரம ப்ரகாரம் ஆஸநத்தில் அமரச் செய்கிறார்.]

விது:—என்ன காரணம்? அத்யாபி பிதாமகன் ப்ரஹ்மதேவன் எழுந் தருளக் காணோம்? ஏன் இவ்வளவு தாமதம்? அவர் நித்யகர்மாநுஷ்டாநம் இன் னும் முடியவில்லையோ? விவாஹ லக்நம் மீறுகிறதே! அவரல்லவா புரோ ஹிதர். அவரின்றி என்ன செய்வது? ஸமயத்தில் இவ்விதம் கவலையுறும்வண் ணம் செய்கிறாரே!

[இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே அம்பர வீதியில் விமாநம் தோன்றுகிறது. ப்ரஹ்மதேவரும் அவர் சிஷ்யனும் இறங்குகின்றனர்.]

ப்ரஹ்ம:—[அரங்கத்தை உற்று நோக்கி] என்ன இவ்வளவு சீக்ரம் விவாஹ மஹோத்ஸவம் ஆரம்பித்தாய்விட்டதே? ஸகலமும் ஸித்தமாய் உள்ளன. நம்மால் தான் தாமதம். ஸமஸ்த முனிவர்களும் ஸ்வஸ்திவாசநம் ஜபிக்கின்ற னர். இதோ கந்தர்வர்கள் மங்கள ஸூசகமாய் கானம் செய்கின்றனர். பக வான் முன்னிலையில் ரம்பை ஊர்வசி மேனகை முதலிய தேவ ஸ்த்ரீகள் பாவ ராக தாளத்துடன் நடநம் புரிகின்றனர். தேவலோகத்து வந்திகள் எம்பெரு மான் கீர்த்தியைப் புகழ்ந்து பாடுகின்றனர். ப்ராக்ருதமாகிய திருவிளக்கு எதற்கு? ஜகஜ்ஜோதியாய் ஜ்வலிக்கும் த்வாதசாதித்யர்களும் வரிசையாய் தீபோத்ஸவ கைங்கர்யம் செய்கின்றனர். சந்த்ரன் பூவுலகம் முழுவதும் ஜலத் திற்குப் பதிலாய்த் தன் கிரணங்களாகிய கைகளினால் அமுதத்தை அள்ளி அள் ளித் தெளிக்கிறான்.

சிஷ்யன்:—[மற்றொரு ப்ராகாரத்தைப் பார்த்து] ஸ்வாமி! இதோ திரள் திரளாய்க் கூடி நிற்கும் ஸ்த்ரீ ஜநங்கள் யார்?

ப்ரஹ்ம.—[உற்று நோக்கி] ஓஹோ! அவர்களா? தேவ ஸ்த்ரீகள்தான். சபரப் பெண்ணாகிய வாஸந்திகாவை எவ்வளவு அழகாய் அலங்கரிக்கின்றனர்! ஆஹா! வேட ஜாதியின் சிங்காரமே சிங்காரம். அக்கர்நாடக அலங்காரங்களைக் களைந்து புருஷோத்தமனின் நாயகிக்குத் தக்கவாறு சிங்காரிக்கின்றனர். தலையி லிருக்கும் மயில் இறகை எடுத்துவிட்டு அந்த ஸ்தானத்தில் நறுமணம் கமழும் திவ்ய புஷ்பங்களைச் சூட்டுகின்றனர். கழுத்தில் வடம் வடமாய்த் தொங்கும் குன்றுமணி பாசிமணி மாலைகளைக் கழற்றி, அவைகளுக்குப் பதிலாய்ப் பற்பல முத்து முதலிய நவரத்ந ஹாரங்களைப் பூட்டுகின்றனர். பவழம் போன்ற சிவப்பு ஆடைகளை நீக்கிப் பளபளவென்று மின்னும் சரிகை வெண்பட் டாடைகளை உடுத்துகின்றனர்.

பகவான்:—ஓஹோ! இதோ பிதாமகன் நாம் நினைக்கும்போதே வந்து விட்டாரே! இதுவும் ஒரு சுப ஸூசகம். ஸ்வாமி! வரவேணும்; வரவேணும். [எழுந்திருந்து அவர் கரத்தைப்பற்றி அழைத்துக்கொண்டு வந்து தமது அர்த்தாஸநத்தில் அமர்த்துகிறார்.] ஓ சேடிகளே! சீக்கிரம் செல்லுங்கள். கல் யாணப் பெண் வாஸந்திகாவை அதிவிரைவில் அழைத்து வாருங்கள். சுப லக் நம் மீறுகிறது. இனிக் கால விளம்பம் வேண்டாம்.

[இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே பத்ராணி வாஸந்திகாவை அழைத்துக்கொண்டு கல்யாணப் பந்த லுள் நுழைகிறாள்; பிறகு பகவானைப் பார்த்து]

பத்ராணி:—ஸ்வாமி! தேவி தனது வ்ரதத்தை ஒரு பழுதுமின்றி வெகு சிறப்பாய் முடித்தாள். இதோ இக்கந்நிகையை க்ருபை கூர்ந்து அங்கீகரிக்கு மாறு விண்ணப்பம் செய்தாள். இப்பொழுதே த்வரையாக அன்னை ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி மூவரும் தேவ மாதர்கள் புடைசூழ, ஆடை ஆபரணங்கள் புஷ்பம் சந்தநம் முதலிய மங்கள த்ரவ்யங்களுடன் வந்துகொண்டிருக்கின்ற னர். [சொல்லிவிட்டு மறைகிறாள்]

வாஸந்திகா:—[எதிரில் பார்த்து மறைவில் தன் தோழியினிடம்] சதுரிகே! இதோ வீற்றிருக்கும் முனிவர் யாரோ அறியேனே! இது என்ன அதி சயம்! இவர் ஒரே ஸமயத்தில் நான்கு பக்கமும் பார்க்கிறார். ஒருமிக்க நால்வ ரிடமும் பேசுகிறார். இவரை நீ அறிவாயா?

சது:—பெண்ணே! இவர் உனக்குத் தெரியாதா? இவர் பிதாமகன். இவரைப்பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா? இவர்தான் ஸ்ருஷ்டி கர்த்தா. நான்கு முகங்கள் இருப்பதினால், இவரை நான்முகனென்று அழைப் பார்கள். அவர் அம்முகங்களைக்கொண்டு ஏககாலத்தில் எல்லோருடனும் பேசு கிறார். அது அவருடைய தபோபலம். முதலில் அவரை வணங்கு.

[அதைச் செவியுற்ற வாஸந்திகா மிகவும் வணக்கத்துடன் அவருடைய திருவடிகளில் பணிகிருள்.]

ப்ரஹ்ம:—சரி; இனி ஏன் விளம்பம்? குழந்தை கல்யாணப் பெண் வந்து சேர்ந்தாள். ஆம்; இவள் தந்தை சபர ராஜன் எங்கே? தானம் வழங்குபரின்றிக் கந்நிகையை வாங்குவது எவ்விதம்? சீக்ரம் அவனை அழையுங்கள்.

[உடனே சபரராஜன் சூரஸேநன் ப்ரவேசித்து அனைவரையும் வணங்கித் தூரத்தில் நிற்கிருன். பிறகு தனது அங்கங்களைப் பார்த்துக்கொள்கிருன்]

சபர:—[மனதுக்குள்] ஆஹா! என்ன ஆச்சர்யம்! என் வேட வேஷம் அனைத்தும் எவ்விதம் மாயமாய் மறைந்தது? ஆம்; இதில் என்ன ஆச்சர்யம்? அன்னை லக்ஷ்மி தேவியின் அமுதமொழி ஏன் பலிக்காமல் போகும்? பகவானை ஸேவித்தேன்; அவர் அநுக்ரஹத்தினால் இந்த்ர ஶாபத்திலிருந்து விடுதலை யடைந்தேன். [உடனே ப்ரகாஶமாய் இரு கைகளையும் குவித்துப் பகவானைப் பார்த்து] ப்ரபோ! தேவரீர் திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்ததினால் ஶாப விமோசந மடைந்தேன். எனது ஸகல பாபங்களும் ஸூர்யனைக் கண்ட பனிபோல் விலகின. நானே தந்யன். தேவரீர் அநுக்ரஹத்தினால் அடியேன் பழைய கந்தர்வ வடிவத்தை யடைந்தேன். இதோ நிற்கும் எனது புதல்வி வாஸந்திகையைக் கந்யாதானம் செய்கிறேன். க்ருபை கூர்ந்து அங்கீகரிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

ப்ரஹ்ம:—சரி; இனி என்ன ஆக்ஷேபணை? சூரஸேநன் தேவத் தன்மையை யடைந்தான். அவன் ஸம்மதி கிடைத்துவிட்டது.

[இவ்வாறு சொல்லி ப்ரஹ்மதேவர் தாமாகவே பகவானுடைய திருக்கரகமலத்தைப் பற்றி மணப்பெண் வாஸந்திகா கையுடன் சேர்க்கிருர். எங்கும் வாத்ய கோஷம்; எங்கும் புஷ்ப மாரி. பாணிக்ரஹண மஹோத்ஸவம் மிகவும் விமர்சையாய் நிறைவேறியது. பிறகு நான்முகன் பகவானைப் பார்த்து]

ஸ்வாமீ! உங்கள் இருவருடைய ஸ்நேஹமும் அன்பும் ஒருகாலும் நழுவாமல் உறுதியாய் இருக்கக்கடவன. மற்றொருவருக்கும் கிட்டாத அந்யோந்யமும் ஆநந்தமும் அபிவ்ருத்தி அடையக்கடவன. [என்று ஆசீர்வதிக்கிருர்.]

சது:—தோழி! வாஸந்திகா! உன் மனத்திற்கு இசைந்த அஹோபிலேஶனை மணாளனாக அடைந்தாய். நீயே அத்ருஷ்டசாலி. கல்யாணப் பெண் முதன்முதலில் தந்தையை நமஸ்கரிக்கவேண்டும். அவ்விதமே செய்.

[வாஸந்திகா வெட்கம் தோன்றத் தந்தையை அடிபணிகிருள்.]

சூரஸே:—எனது செல்வ மகளே! கந்யாரத்நமாகிய உன்னல் எனது குலம் அலங்கரிக்கப்பட்டது. பீதாம்பரதாரியான பரம புருஷனல் அநுக்ரஹிக்கப்பட்டாய். நானும் பரம பாவநமானேன். இனி எனக்கென்ன குறை? பதியின் க்ருஹத்தில் ஸகல போக போக்யங்களுடன் மன மகிழ்ந்து வாழக்கடவாய். இப்பொழுது நான் உனக்குப் புகட்டும் புத்திமதியை ஸாவதாநமாகக் கேள். இனி, தந்தை தாய் முதலிய ஸகல பந்துக்களும் ஜகத்குருவாகிய பகவானன்றி மற்றெவரும் இல்லே. உன் கண்ணேயும் கருத்தையும் ஒருமிக்கக் கவர்ந்த கணவன் சுச்ரூஷையிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கக்கடவாய். எப்பொழுதும் பர்த்தாவிற்கு அநுகூலேயாய் அவர் மனம் கோணுமல் நடக்கக்கடவாய். [ஆகாயத்தில் தேவ துந்துபி முழங்குகிறது. பாரெங்கிலும் மலர்மழை பொழிகின்றது; எங்கும் ஒரே ஆநந்தமயம்.]

ப்ரஹ்ம:—தேவா! தேவரீர் மநோரதம் ஈடேறியது. இன்னும் தேவரீர்க்கு ப்ரியமானவை எவை? அடியேன் செய்யக் காத்திருக்கிறேன். ஆஹா! இப்பெண்மணியின் தவப்ரபாவந்தான் என்ன? தேவரீரே அதன் பலமாகக் கிடைத்தீர். தேவரீர் ப்ரீதி பாத்ரமாகிய இந்த ஸுந்தரி, தேவி லக்ஷ்மியின் அநுக்ரஹத்தால் தேவரீர்க்குக் கிடைத்தாள். தேவரீர் கருணேயால் இதோ நிற்கும் சூரஸேநன் சாபம் நீங்கித் தேவனுய் ப்ரகாசிக்கிருன். தேவி லக்ஷ்மி தேவரீர் விவாஹ மஹோத்ஸவத்தைக் கண்குளிரக் கண்டு களித்தாள்; இதோ முத்தாரத்தி எடுப்பதற்கு எழுந்தருள்கிருள். இனித் தேவரீர் அடையவேண்டிய பயன்தான் என்ன? ஸகல மநோபீஷ்டங்களும் நிறைவேறின.

**பரத வாக்யம்: மங்களம்**

அரசர்கள் சாஸ்த்ரம் கட்டளே யிடும்வண்ணம் தர்மம் வழுவாமல் ஒவ்வொரு நாளும் பொருள் ஸம்பாதிக்கக்கடவர். பூதேவியானவள் தக்க காலத்தில் ஏராளமாய் மழைபொழியப் பெற்றுப் பயிர் பச்சை ஸம்ருத்தியுடன் விளங்கக்கடவள். அந்தணர்கள் விவேகம் மிக்கவர்களாய் வித்யையுடன் வணக்கத்தையும் ஸாதிக்கக்கடவர். ஆஸ்திகர்களாகிய ஸாதுக்கள் க்ருஹத்தில் எப்பொழுதும் லக்ஷ்மீதேவியுடன்கூட ஸ்நேஹமாய் வாக்தேவியும் வஸிக்கக்கடவள். [தேவர் முதலிய அனேவரும் செல்கின்றனர்.]

வாஸந்திகா பரிணயம் முற்றிற்று.

காப்பக நூலகம்

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தா வரவு

[19—8—48 முதல் 20—9—48 வரை]

| | | | ரூ. |
|---|---|---|---|
| 45 | ஸ்ரீ. S. ரங்காசார்யர், M.A., ஸிம்லா | ... | 3 |
| 59 | ,, A. ரங்காசார்யர், முத்துப்பட்டினம், காரைக்குடி | ... | 3 |
| 73 | ,, J. வரதராஜையங்கார், அட்வொகெட், திருநெல்வேலி | | 3 |
| 137 | ,, P. S. கோவிந்தையங்கார், ஸ்ரீரங்கம் | ... | 3 |
| 178 | ,, L. சக்ரவர்த்தி ஜகந்நாதாசார்யர், கும்பகோணம் | ... | 3 |
| 179 | ,, K. R. ராமஸ்வாமி ஐயங்கார், M.A., திருவல்லிக்கேணி | | 3 |
| 265 | ,, S. ராமஸ்வாமி ஐயங்கார், 'கோகுலம்' பல்லாவரம் | .... | 3 |
| 297 | ,, R. ஸாரநாதையங்கார், ப்ளீடர், வ்ருத்தாசலம் | .... | 3 |
| 306 | ,, K. R. ராமாநுஜம், மயிலாப்பூர் | .... | 3 |
| 321 | ,, R. வரதாசார்யர், B.A., L.T., சைதாப்பேட்டை | .... | 3 |
| 410 | ,, கல்யாணபுரம் அப்பா ஸ்ரீநிவாஸையங்கார், புது டெல்லி | | 3 |
| 557 | ,, R. சேஷையங்கார், ஸ்ரீ அஹோபில மடம், ஸ்ரீ வில்லிபுத்தூர் | | 3 |
| 586 | ,, T. N. க்ருஷ்ணமாசார்யர் R. M. S. ரெய்ச்சூர் | .... | 3 |
| 659 | ,, K. S. கோபாலன், ஜி. டி. மதராஸ் | .... | 3 |
| 710 | ,, ரங்காசார்யர், பெரம்பூர் | .... | 3 |
| | | மொத்தம் ரூ. | 45 |

Regd. M. 4437.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

**இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.**

*இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.*

**விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.**

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டா லன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

| | | | |
|---|---|---|---|
| ராப்பர் வெளிப்புறம் | பக்கம் 1-க்கு | மீ 1-க்கு | ரூ. 20. |
| ,, உட்புறம் | ,, | ,, | ரூ. 15. |
| ஸஞ்சிகையின் உட்புறம் | ,, | ,, | ரூ. 10. |

**ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.**

*இங்ஙனம்:*

**மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**
**நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.**

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.